விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 01 திங்கட்கிழமை (14.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 086

# ஆட்டம் போட்டால் அடக்கி விடுவேன்



## கட்சிப் பிளவு, எதிர்ப்பு பேரணிகளை கடிந்து ராஜபக்ஷவினரை எச்சரிக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தி கட்சித் தலைமைக்கு நெருக் கடியை ஏற்படுத்தும் வகையில் மகிந்த தரப்பினர் தொடர்ந்தும் ஈடுபடு வார்களேயானால், அவர்கள் இழைத்த குற்றங்கள் அனைத்தையும் ஆரம் பத்திலிருந்து வெளியே எடுப்பேன். அதன்பின்னர் ராஜபக்ஷவினர்களால் இந்த நாட்டில் வாழவே முடியாது போகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் உள்ளூ ராட்சி உறுப்பினர்கள் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதில் ஜனாதிபதி கூறுகையில்,

உண்மையாக கூறினால் முன் னர் நான் கட்சியை விட்டு செல்வத ற்கு பாதையை அமைத்தது ராஜ பக்ஷர்கள்தான். எனினும் நான் அவர்களுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை.

ஆனால் மகிந்த புதிய கட்சியை உருவாக்கி சுதந்திர கட்சியை பிளவு படுத்தினால் என்னிடம் இருந்து விடுதலை கிடையாது. என்னிடம் அவர்கள் தொடர்பிலான அனை த்து தகவல்களும் உள்ளன.

ஆரம்பத்தில் இருந்து அனைத்தை யும் வெளியே எடுப்பேன். அதன் பின் னர் மக்கள் அனைத்து உண்மை களையும் அறிந்து கொள்வர்.

24ம் பக்கம் பார்க்க

## நாசவேலை காரணமாக மின்சாரம் தடைப்பட்டதா?

### சந்தேகம் வெளியிடுகிறார் அஜித் பெரேரா

(கொழும்பு)

நாசவேலை காரணமாக நாட் டில் மின்சாரத் தடை ஏற்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என மீள் சுழற்சி சக்தி மற்றும் மின்வலு பிரதி அமைச்சர் அஜித் பெரேரா நேற்றிரவு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சாரம் தடைப்பட்டது தொடர் பில் வெளிப்படையாக தெரியும் காரணிகள் மிகவும் அசாதாரண மானவை.

இரண்டு வாரங்களுக்கு முன் னதாகவும் தற்போதும் இவ்வாறு மின்சாரம் தடைபட்டிருந்தமை, நாச வேலையாக இருக்குமோ என சந்தேகிக்க வேண்டியுள்ளது.

தொழில்நுட்ப கோளாறுகளுக்கு அப்பாலான காரணிகளின் அடிப்

24ம் பக்கம் பார்க்க

## திடீர் மின்சாரத் தடை

### பதவி விலகுகிறார் மின்சார சபைத் தலைவர்

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று திடீர் மின்தடை ஏற்பட்டது.

நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு ஏற்பட்ட மின்சாரத் தடை இரவு 10 மணிவரை தொடர்ந்து இருந்தது. கடந்த 17 நாட்களில் இரண்டு தட வைகள் நாடு முழுவதும் மின்சாரத் தடை ஏற்பட்டிருந்தமையால் மக்கள் பலரும் பல்வேறு அசௌகரியங்க ளுக்கு உள்ளாக நேரிட்டது. நுரைச் சோலை அனல் மின் நிலைய மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே நேற்று மின்தடை ஏற்படக் காரணம் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை மின்சார சபையின் தலைவர் அனுர விஜேபால பதவியை ராஜினாமா செய்யத் தீர்மானித்து ள்ளார். நாட்டில் ஏற்பட்ட மின்சாரத் தடைககான பொறுப்பினை ஏற்றுக் கொண்டு பதவி விலகத் தீர்மானித் துள்ளார். நேற்றைய தினம் ஏற்பட்ட மின் சாரத் தடையை சீர்செய்ததன் பின்னர் தாம் அமைச்சிடம் பதவி வில கல் கடிதத்தை ஒப்படைக்க உள்ள தாக அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## சில்லறை வணிகர்கள் சிகரட் விற்கத் தடை

(கொழும்பு)

சில்லறை வணிகர்களால் சிக ரட் உள்ளிட்ட புகையிலைப் பொருட் கள் விற்பனை செய்யப்படுவதை தடை செய்வது குறித்து புகையிலைப் பொருட்கள் மற்றும் மதுபானம் தொட ர்பான தேசிய அதிகார சபை அவ தானம் செலுத்தியுள்ளது. அதன் தலைவர் வைத்தியர் பாலித்த

24ம் பக்கம் பார்க்க

## மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்குழு வீதியில் கலைத்து கலைத்து வாள்வெட்டு

### சினிமாப்பாணியில் நடந்த சமூக விரோதம்

(யாழ்ப்பாணம்)

மரக்காலை ஒன்றில் நின்ற இளைஞர்களை மோட்டர் சைக்கி ளில் வந்த இளைஞர் குழு ஒன்று நடு வீதியில் கலைத்து கலைத்து வாளால வெட்டியுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை ஆறு மணியளவில் யாழ்.தட்டா தெரு சந்தியில் இடம்பெற்றுள்ளது. இதனால் அந்த பகுதி நேற்றைய தினம் பயத்தில் உறைந்திருந்தது.

தட்டாதெருவில் அமைந்துள்ள விறகுகாலை ஒன்றில் சில மாணவ ர்களும் இளைஞர்களும் நின்றுள் ளனர். இதன் போது அப்பகுதியால் மூன்று மோட்டார் சைக்கிளில் வாள்கள், கொட்டன்கள் சகிதம் வந்த 6 இளைஞர்கள், விறகுகாலையில நின்றவர்களை சண்டைக்கு அழை த்துள்ளனர். இதன்போது இருதரப் பும் முரண்பட மோட்டார் சைக்கி ளில் வந்த சமூகவிரோத கும்பல், விறகுகாலையில் நின்றிருந்தவ ர்களை வாளால் வெட்ட முயன்று ள்ளனர், சமூகவிரோத கும்பலின் வாள்வெட்டிலிருந்து தப்புவதற்காக அவர்கள் அங்கிருந்து ஓடமுயன்

24ம் பக்கம் பார்க்க

## கப்பம் கோரியே வானுடன் எரிப்பு

(கொழும்பு)

தங்கொட்டுவ பகுதியில் கடந்த 11ஆம் திகதி ஐந்து பேருடன் தீயில் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப் பட்ட வான் தொடர்பாக 5 சந்தேக நபர்களை கைது செய்திருப்பதாக குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித் தனர்.

தங்கொட்டுவ - புத்கம்பொல பகு தியில் பாழடைந்த வீதியில் எரிந்த

24ம் பக்கம் பார்க்க

af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி
• பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
• எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
• இலவசம் : படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
• யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்

(3815)
ஆரம்பம் விரைவில் : உடன் அழைத்துப் பதியவும்
021 222 8093 எ, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## மீனவர்களின் அத்துமீறல் குறித்த இலங்கை-இந்திய பேச்சுவார்த்தையை தனித்து பிற்போட்டது புதுடில்லி

(புதுடில்லி)

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக இலங்கை கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் இந்த மாதம் நடத்தவிருந்த பேச்சுக்களை இந்திய அரசாங்கம் பிற்போட்டுள்ளது.

கடந்த மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், இலங் கைக்கு மேற்கொண்டிருந்த பயணத்

24ம் பக்கம் பார்க்க

## புதிய கடன்களை சீனாவிடம் கோரல்

இலங்கை அரசாங்கம் சீனாவி டம் புதிய கடன்களைக் கோரியிருப் பதாக அனைத்துலக வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமை ச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித் துள்ளார்.

பல்வேறு திட்டங்களுக்கும், மத தல அனைத்துலக விமான நிலை யத்தை கூட்டுமுயற்சியாக அபிவிரு

24ம் பக்கம் பார்க்க

# திருமலை வரோதய நகர் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு



(திருகோணமலை)

திருகோணமலை வரோதய நகரில் அமைந்துள்ள அம்மன் கோவில் மலைப்பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

முருகதாஸ் ஹரியதாஸ் எனும் 19வயது ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தின் கழுத்து பகுதியில் கயிற்றுத் துண்டு கட்டப்பட்டு காணப்படுவதுடன் அக்கயிற்றின் மற்றைய பகுதி மரத்தில் கட்டப்பட்டிருக்கின்றது.

குறித்த நபர் கடந்த 11-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை, பனை மட்டை வெட்ட செல்வதாக தனது தந்தையிடம் கூறிச்சென்ற நிலையில் வீடு திரும்பியிருக்கவில்லை.

இதனையடுத்து, அவரது குடும்பத்தினரால் நேற்று முன்தினம் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த மரணமானது கொலையாக இருக்கலாம் என சந்தேகிக்கும் உப்புவெளி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

**பெயர் மாற்றம்**


கெருடமடு மன்னாகண்டல் புதுக்குடியிருப்பு என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி சண்முகம் ஈஸ்வரி என்னும் நான் இத்தால் சகலருக்கும் அறியத்தருவது எனது சுயவிருப்பின் பேரிலும், என்னுடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தவிர்ந்த ஏனைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள திருமதி சண்முகம் விஜயகுமாரி என்னும் பெயரினையே தொடர்ந்தும் பயன்படுத்தவுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
திருமதி சண்முகம் விஜயகுமாரி
கெருடமடு, மன்னாகண்டல்
புதுக்குடியிருப்பு.

(3893)

# காணாமல்போன வளர்ப்பு பசு இறைச்சிக்காக வெட்டப்பட்டது!

## எஞ்சிய உடற்கழிவுகள் குளத்தினுள் வீச்சு



(கோப்பாய்)

அல்லைப்பிட்டி 2-ம் வட்டாரம் பகுதியில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த வளர்ப்பு பசு மாடு ஒன்று நேற்று முன்தினம் காணாமல் போயுள்ளது.

பசு மாட்டின் உரிமையாளர் பல இடங்களிலும் பசுவை தேடிய நிலையில் பசுவை காணாது தேடல் முயற்சியை கைவிட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்றுக் காலை 7 மணியளவில் பெரியமண்குழி குளத்தில் பசுவை கொலை செய்து இறைச்சி எடுக்கப்பட்டதன் பின்னர் பசுவின் தலை உட்பட எஞ்சிய உடல் கழிவுகளை குறித்த குளத்தினுள் வீசி விட்டுச் சென்றுள்ளமை தெரியவந்தது.

இது போன்ற பல சம்பவங்கள் அண்மைக் காலமாக குறித்த பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றன. அல்லைப்பிட்டி பகுதியில் பெருமளவான கட்டாக்காலி மாடுகள் காணப்பட்டபோதிலும் அதனை களவாடி இறைச்சிக்காக வெட்டப்பட்டமையால் அதன் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்து வருகின்றது.


இதன் காரணமாகவே திருடர்கள் தற்போது வளர்ப்பு மாடுகள் மீதும் கைவரிசையை காட்டத் தொடங்கியுள்ளனர். இதனால் வளர்ப்பு மாடுகளை மேய்ச்சலுக்கு கட்டுவதற்கு அதன் உரிமையாளர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

மேலும் அல்லைப்பிட்டி பகுதியில் இரகசியமாக மாடுகளை கடத்தி வந்து இறைச்சிக்காக வெட்டி அதன் இறைச்சியை பிற இடங்களுக்கு கடத்துவதாக தெரிவித்த அப்பகுதி மக்கள்,

இறைச்சிக்காக வெட்டிய மாடுகளின் உடற்கழிவுகளை குளங்கள், கிணறுகள் போன்ற நீர்நிலைகளில் வீசுவதனால் பாரிய சுகாதார சீர்கேடுகளும் இப்பகுதியில் இடம்பெறுவதாவும் விசனம் தெரிவித்தனர்.

எனவே கால்நடைகள் திருடப்படுகின்றமை தொடர்பில் பொலிஸார் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-87)

# மாலைதீவில் கப்பம் பெற்றுவந்த இருவர் கொழும்பில் வைத்து கைது



(கொழும்பு)

மாலைதீவை சேர்ந்த அரசியல்வாதிகள் வர்த்தக பிரமுகர்களின் ஆபாசவீடியோக்களை பயன்படுத்தி அவர்களை மிரட்டிக் கப்பம் பெற்றுவந்த அந்த நாட்டை சேர்ந்த இருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட நபர்கள் குறித்து இலங்கை குற்றப்புலானய்வு திணைக்களத்திடம் மாலைதீவு வர்த்தகர்கள் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாலைதீவு செல்வந்தர்களின் குறிப்பிட்ட வீடியோவை வெளியிடாமலிருப்பதற்காக இருவரும் பெருமளவு பணத்தை கப்பமாக கோரியுள்ளனர்.

இருவரும் கொழும்பு, தெகிவளையில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தவேளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள இரு மடிக்கணினிகளிலும், மாலைதீவை சேர்ந்த 100இற்கும் மேற்பட்டவர்களின் ஆபாச ஒளிநாடாக்கள் காணப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-12)

உ
சிவமயம்
ஓம் நமசிவாய சிவாய நம ஓம்

**மணிவிழா நாயகன்**
**வளமுடன் வாழ்க வாழ்க வாழ்க**




(3894)

சிதம்பரத்தான் திருவருளுடன் வாழ்த்துவோர் :
புனித திருத்தல பாத யாத்திரிகர் சேவாசங்கம் இலங்கை
வெள்ளப் பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் இந்து மாமன்றம் வேரவில், பூநகரி.
உலக சைவத்திருச்சபை இலங்கை
பெருங்குளம், சங்கத்தானை வீதி , சாவகச்சேரி.

**மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்**




**திருமதி தங்கராணி சிவபாலன்**

கடந்த ஏழு வருடங்களாக எமது பாடசாலையில்
ஆசிரியையாக, உப அதிபராக சேவையாற்றி ஓய்வுபெறும்
திருமதி தங்கராணி சிவபாலன் அவர்களின்
ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்

சேவை விபரம்

18.05.1977 - 31.01.1983 - யா/ வரணி மகா வித்தியாலயம்
01.02.1983 - 31.12.1984 - யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
01.01.1985 - 14.05.1989 - மு/ வவுனிக்குளம் யுனிற்-2 அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
15.05.1989 - 31.12.2009 - கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
01.01.2008 - 12.03.2016 - கிளி/இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை

பாடசாலைச் சமூகம்
கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா

(C-4000)

# பயங்கரவாத தலைவர்களுடன் தொடர்பு வைத்திருக்கவில்லை

## சரத் பொன்சேகாவின் கருத்து விரைவில் நடவடிக்கை- பசில்


(கொழும்பு)

**அமைச்சர் சரத் பொன்சேகா தன்னைப் பற்றித் தெரிவித்த கருத்துக்களில் எந்தவிதமான உண்மையும் இல்லையெனவும், தான் ஒருபோதும் பயங்கரவாதத் தலைவர்களுடன் தொடர்பு வைத்திருக்கவில்லையென வும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தான் இந்த பொய்யான அறிவிப்பு தொடர்பில் மிக விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தனது சட்டத்தரணி சுசந்த சேனாபுர மூலம் விடுத்துள்ள விசேட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு கடந்த 2005 ஆம் ஆண்டு தேர்தலின் போது பசில் நிதி வழங்கியதாக பீல்ட் மார்ஷலும் அமைச்சரு மான சரத் பொன்சேகா கட ந்த பாராளுமன்றக் கூட்டத் தில் இடம்பெற்ற தனது கன் னியுரையின் போது குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. (இ-5)

## இலங்கையின் தேசிய மலராக அல்லி மலர் நேற்று அறிவிப்பு



இலங்கையின்தேசிய மலராக இதுவரையில் நீலோற்பலம் எனப்படும் நீல அல்லி மலர் பெயரிடப்பட்டிருந்தது எனினும் இனி மேல் அல்லி மலரே இலங்கையின் தேசிய பூவென்று நேற்று அறிவிக்கப்பட்டுள் ளது. உயிரியல் பல்வகைமை செயலகத்தின் பணிப்பாளர் பத்மா அபேகோன் இதனைத் தெரிவித்துள்ளார். இதற்காக அமைச் சரவை அந்தஸ்து கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நீலோற்பலம் எனப்படும் நீல அல்லி வெளிநாட்டைச் சேர்ந்த மலர் என்பதால் அல்லி மலரை இலங்கையின் தேசிய மலராக கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## அரசின் நொண்டிச் சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை

### ஜே.வி.பி.விசனம்

தற்போதைய அரசாங்கம் மக்கள் மீது பல்வேறு வரிச் சுமைகளை சுமத்திவருவதாகவும், இதற்காக அரசாங்கம் கூறும் நொண்டிச் சாட்டுக் களை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தேர்தலின்போது மக்களிடம் வாக்குக் கேட்டது, நாட்டை முன்னேற்றுவதற்கும், மக்களுக்கு சலுகை வழங்குவதற்குமே ஆகும். ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னர், சலுகை தர முடியாது, நாட்டில் பிரச்சினைகள் பல உள்ளன, மகிந்த கடன் அதிகம் பெற்றுள்ளார், ஒரு தொகை கடனே ஆரம்பத்தில் விளங்கியது, இன்னுமொரு பகுதி மறைந்திருந்துள்ளது, தற்பொழுது தான் அது தெரியவந்தது என்றெல்லாம் கதை விடுகின்றனர்.

நாம் பிரதமர் ரணிலிடம் கேட்கின்றோம். இதற்கு முன்னர் நீங்கள் இதனை அறியாமலா இருந்தீர்கள்? என்பதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

## குமார் குணரட்னத்திற்கு இரட்டை பிரஜாவுரிமை வழங்க வேண்டாம்

முன்னிலை சோஷலிஸக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் குமார் குணரட்னத்தின் இரட்டை பிரஜாவுரிமை விண்ணப்பத்துக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று சட்டமா அதிபர் திணைக்களம், குடிவரவு திணைக்கத்துக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம், திணைக்களத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

குமார் குணரட்னம் தொடர்பில் சட்ட ஒழுங்கு குறித்து குடிவரவுத் திணைக்களம் சட்டமா அதிபர் திணைக்களத்தை வினவிய நிலையிலேயே இந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை அரச புலனாய்வு பிரிவும் குமார் குணரட்னத்துக்கு இரட்டை பிரஜாவுரிமை வழங்கபடக்கூடாது என்று கோரியுள்ளமை குறிப்பிடத்தக் கது. (இ-5)

## தங்கத்தை தேடி டுபாய் நோக்கி நிதிமோசடிக் குற்றப் பிரிவினர்

இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் காணாமல் போன தங்கத்தை பயனபடுத்தி டுபாயில் மேற் கொள்ளப்பட்டதாக சந்தேகிக்கப் படும் பாரியளவிலான முதலீடு தொடர்பாக விசாரணையை நடத்துவதற்கு பாரிய நிதி மோசடி குற்றப் பிரிவினர் இவ்வாரம் டுபாய் நாட்டுக்குச் செல்லவுள்ளனர்.

சுமார் 100 கிலோ தங்கம் டுபாயில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக நிதி மோசடி குற்றப் பிரிவினர் இதுவரை மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (இ-5)

## பிரதி சபாநாயகரின் மகன் மீது தாக்குதல்

பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபாலவின் மகன் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் எஸ்.எஸ்.சீ விளையாட்டு மைதானத்திற்கு அருகில் வைத்து திலந்த சுமதிபால தாக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான திலந்த சுமதிபால வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

வி.ஐ.பி இலட்சினைப் பொறிக்கப்பட்ட வாகனம் ஒன்றில் வந்தவர்களே இந்த தாக்குதலை மேற்கொண்டதாக தெரிய வருகிறது.

இதேவேளை குறித்த மைதானத்தில் கொழும்பின் இரண்டு பிரபல பாடசாலைகளுக்கிடையே பிக் மெட்ச் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## விமானிப் பயிற்சிப் பாடசாலை குறித்து சஜின் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் வாஸ் குணவர்த்தன மற்றும் அவரின் இரத்மலானை விமானி பயிற்சி பாடசாலை என்பவை தொடர்பில் நிதி மோசடி தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இந்த பாடசாலையில் பயிற்சி பெற்றவர்களிடம் 1.5 மில்லியன் ரூபாய்கள் அறிவிடப்பட்ட போதும் அதற்கான உரிய பயிற்சிகள் வழங்கப்படவில்லை என்பதே குற்றச்சாட்டாகும்.

இது குறித்து அங்கு பயின்ற மாணவர்களும்பெற்றோரும் இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர். (இ-5)

## பருத்தித்துறையில் கஞ்சாவிற்ற குடும்பஸ்தர் நேற்று கைதானார்

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் விற்பனைக்காக ஆட்டோ ஒன்றில் எடுத்து வரப்பட்ட 13 பைக்கட் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக காங்கேசன் துறைப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜஃபா தெரிவித்தார்.

நேற்று பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து காலை 9.30 மணியளவில் தயார் நிலையில் நின்ற பருத்தித்துறைப் பொலிஸார் ஆட்டோவில் வந்து கஞ்சாப் பைக் கட்டுக்களை விற்பனை செய்ய முயன்ற குடும்பஸ்தர் ஒருவரைக் கைது செய்தனர்.

ஆட்டோவை சோதனை செய்த போது 19.5 கிராம் நிறையுடைய 13 கஞ்சாப் பைகளும், மூன்று போத்தல் அரச சாராயமும் கைப்பற்றப் பட்ட தாக பொலிஸார்தெரிவித்தனர்.

மேலும் கைது செய் யப் பட் டவர் தும்பளை வீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் எனவும் அவரிடம் மேலதிக விசார ணைகள் இடம் பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித் தனர். (இ-60)

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு வாரிசு உரிமை இல்லை - ஹக்கீம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து கட்சிகளுக்கும் வாரிசு உரிமை இருந்தும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு மாத்திரம் வாரிசு உரிமைக்கு இடமே இல்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய மாநாட்டுக்கான இளைஞர் படையணி உறுப்பினர்களை பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் சந்தித்து உரையாற்றும் போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த கட்சிக்குள் வாரிசுரிமை என்று யாராவது ஒருவரை காட்ட முடியுமாக இருந்தால் யாராவது காட்டலாம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் வாரிசுரிமை அரசியல் என்ற பேச்சுக்கு ஒருபோதும் இடமேயில்லை என அவர் தெரிவித்தார்.


நான் சிலருக்கு அதை ஆகாது என தடுத்தும் வைத்துளளேன். மேடையில் உள்ளவர்களுக்கும் அந்த ஆசைகள் இருந்தால் அதை தடுக்க முயற்சி செய்யுங்கள் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த கட்சிக்குள் தன்னுடைய குடும்பத்தினரை வாரிசுரிமையாக நுழைகக எண்ணுபவர்கள் அதனை மாற்றிக் கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

அப்படி யாராவது செய்ய வருவார்களானால் இந்த கட்சிக்குள் அவர்களுக்கு எந்த விதமான பாரம்பரிய அங்கீகாரமும் கிடையாது எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)













கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினத்தின் மணிவிழா நிகழ்வும் "நாகரத்தினமாலை" மலர் வெளியீடும் நேற்றையதினம் யாழ் சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள். தென்னிந்தியதிருச்சபை முன்னாள் பேராயர் அருட்திரு சு.ஜெபநேசன். சின்மயமிஷன் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன். யாழ் மாவட்டசெயலர் நா.வேதநாயகன். யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம். வடமாகாண கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன். வடமாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார். வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன். யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா. சர்வதேச லயன்ஸ் கழக யாழ்.மாவட்ட ஆளுநர் டாக்டர் லயன் வை.தியாகராஜா. யாழ் இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா. யாழ் கைத்தொழில் மன்றத் தலைவர் கே.விக்னேஷ். இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன். ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளை முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன். மகாராணி பட்டுச்சோலை உரிமையாளர் க.சோமசேகரம். சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் ஸ்ரீபிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். நாகரத்தினமாலை மலரை திருநெல்வேலி தேனுகளஞ்சிய உரிமையாளர் ஸ்ரீமோன்ராஸ் தம்பதிகள் வெளியிட்டு வைத்தனர். தொடர்ந்து விழா நாயகனுக்கு கிரீடம் அணிவிக் கப்பட்டு கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது. தொடர்ந்து நன்றி உரையை மணிவிழாச் சபையின் செயலாளர் சி.மாணிக்கராஜா நிகழ்த்தினார். (படங்கள்:-பொ.சோபிகா)

## முன்னறிவித்தலின்றி போராட்டம்

# பிக்கு உட்பட 20 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாமஸ்டன் ரட்ணகிரி பிரதேசவாசிகள் அண்மையில் முன்னெடுத்த குடம் ஏந்திய வீதி மறியல் போராட்டத்தில் ஈடுப்பட்ட மக்களில் பௌத்த பிக்கு உட்பட 20 பேருக்கு எதிராக நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர லிந்துலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.செல்வகுமாருக்கு நுவரெலியா பிரதி பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த நேற்று பணிப்புரை விடுத்துள்ளார்.

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கும். லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராம அதிகாரிகளுக்கும் விழிப்பூட்டும் கலந்துரையாடல் ஒன்று நேற்று லிந்துலை சமர்வீவ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே பொலிஸ் அத்தியட்சகர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதற்கு பதிலளித்த லிந்துலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.செல்வகுமார் தெரிவித்ததாவது.

குறித்த போராட்டம் இப் பகுதிக்கான லிந்துலை பொலிஸாருக்கும் கிராம அதிகாரிகளுக்கும் முன் அறிவித்தல் இன்றியே நடைபெற்றது. இதனால் ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் போக்குவரத்து சில மணி நேரங்கள் ஸ்தம்பிதமடைந்தன.

இவ் வீதியினூடாக பயணித்த வெளிநாட்டவர் மற்றும் ஏனையோர் போக்குவரத்து இடையூறுக்கு ஆளாகினர். மக்களுக்கு போக்குவரத்து இடையூறு மற்றும் அசௌகரியங்களை உருவாக்கியதன் காரணமாக இவ் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய பௌத்த பிக்கு உட்பட 20 பேரின் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்திற்கு லிந்துலை பொலிஸார் வழக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் குறித்த நபர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த சிட்டாரசு பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரங்கள் குறித்த நபர்களுக்கு பொலிஸார் ஊடாக வழங்கப்பட்ட அதே வேளை எதிர்வரும் 26-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி பொலிஸாரால் பணிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.செல்வகுமார் நுவரெலியா பிரதி பொலிஸ் அத்தியட்சகருக்கு பதிலளிக்கும் போது தெரிவித்தார். (செ-12)

## இலங்.தம்பதியினர் வாகன விபத்தில் பலி




(கொழும்பு)

தென்னாபிரிக்காவின் ஜொஹானஸ் பேர்க்கில் இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் இலங்கைத் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

மிக வேகமாகச் சென்ற கார் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து தம்பதியினர் மீது மோதுண்டுள்ளது.

இந்த வாகனத்தை அதிவேகமாகச் செலுத்திய 26 வய தான சாரதியும் விபத்தில் உயிரிழந்துள்ளார். உணவு விடுதியிலிருந்து வெளியேறி வீதி ஓரத்தில் நடந்து சென்ற தம்பதியினர் மீது வாகனம் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிக வேகமாக சென்ற கார் கட்டுப்பாட்டை இழந்து இலங்கைத் தம்பதியினர் மீது மோதியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேசத்தில் மணிக்கு 60 கிலோ மீற்றர் என்ற வேகத்தை விடவும் வாகனத்தைச் செலுத்தக் கூடாது என்ற போதிலும் குறித்த இளைஞர் மிக வேகமாக வாகனத்தைச் செலுத்தியுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (செ-12)

# பங்குனித்திங்கள் பெருவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் அருள் மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய பங்குனித்திங்கள் பெருவிழா இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து அபிஷேக ஆராதனைகளும் விசேட பூசைகளும் இடம் பெற்று பொங்கல், அன்னதானமும் இடம் பெறும் என கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ

# வடக்கு கல்வி அமைச்சினால் சிறந்த நூற்பரிசு தேர்வுப்போட்டி

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வருடாவருடம் நடத்தப்பட்டு வருகின்ற சிறந்த நூற் பரிசுத் தேர்வுப் போட்டி-2015 இவ்வருடமும் நடத்தப்படவுள்ளதாக வடமாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இப் போட்டியில் ஏற்கப்படும் நூல்கள் அனைத்தும் 2015 ஜனவரி 1ஆம்திகதிக்ம் 2015டிசெம்பர் 31ஆம் திகதிக்கும் இடையில் வெளிவந்திருப்பதுடன் அந்நூல் முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.

நூலாசிரியர் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களில் ஒன்றினைப் பிறப்பிடமாக கொண்டவராக அல்லது வட மாகாணத்தில் 10 வருடங்கள் வாழ்ந்தவராக இருத்தல் வேண்டும். (யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி)

நூலின் 4 பிரதிகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

போட்டிகளில் பங்குபற்றும் நூலாசிரியர் தான் எந்தப் பிரிவில் தனது ஆக்கத்தை சேர்த்துக் கொள்ள விரும்புகிறார் என்பதை கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். அதாவது, அறிவியல், சமூகவிஞ்ஞானம், ஆய்வு நூல், திறனாய்வு, சமயம், வரலாறு, மரபுக் கவிதை, புதுக்கவிதை, நாவல், நாடகம், குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம், நாட்டார் இலக்கியம் ' சிறுகதை, மொழி பெயர்ப்பு, ஏனையவை

நூல் I S B N முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதாக இருத்தல் வேண்டும்.

மொழி பெயர்ப்பு (மொழி பெயர்ப்பு நூல்கள் யாவும் தமிழ் மொழியிலிருந்து ஏனைய மொழியிலும், ஏனைய மொழியிலிருந்து தமிழ் மொழியிலும் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்.) தவிர்ந்த ஏனைய நூல்கள் தமிழ்மொழி மூலம் ஆக்கப்பட்டிருப்பதுடன் நூலில் பதிப்பித்த ஆண்டும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தரிடம் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து நூல்களை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2016.04.30 ஆகும். அத் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக

உதவிப்பணிப்பாளர்,
இல.175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூற் பிரதிகள் தொடர்பில் ஏது வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் நூல்கள் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு 021 205 4105 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)


## மணிவிழா

பொன்மனச் செம்மல், மனிதநேய கையாளன், கல்விக்காருண்யன்

**E.S.P நாகரத்தினம்**

அவர்கள்

13.03.2016 நேற்று ஞாயிற்றுக்கிழமை மணி விழாக் கொண்டாடியவரும் எமது அமைப்புக்கு உதவிகள் பல புரிந்த வள்ளலுமான **E.S.P.** நாகரத்தினம் அவர்கள் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பட்டின சபை வீதி,
சங்கானை.

(3890)

## வாழ்த்து



நெறியாளர் குழு
வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்



## தேவை

பருத்தித்துறையில் இயங்கும் பிரபல உணவகத்திற்கு இரண்டு ரீ மேக்கர்கள் தேவை. சம்பளம் மற்றும் ஏனைய விடயங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்.

அமேஜ் உணவகம்
பிரதான வீதி,
பஸ் நிலையம் முன்பாக,
பருத்தித்துறை

தொடர்பு: 077 6214224

(சி/4004)

## தேவை

உள்ளூர் இன ஆடுகள், குட்டிகள், மாட்டுக்கன்றுகள், பராமரிப்பதற்கும் மற்றும் தோட்ட வேலை செய்வதற்கும் முல்லைத்தீவு பகுதிக்கு வேலையாள் தேவை. தொடர்பு இல : (சி-3947)

0771681697, 0768825467



## கிருஷ்ணா அடகு சேவை
## பதிவு இல J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014 ஆம் ஆண்டு (31.12.2014) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி (15.04.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.04.2016) ஆம் திகதி அன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2015 ஆம் ஆண்டு (31.09.2015) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி (15.04.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.04.2016) ஆம் திகதி அன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல.370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

(சி/4001)

உரிமையாளர்: A.S.Surendran
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046



## கண்ணீர் அஞ்சலி



**அமரர் மங்கயற்கரசி அமிர்தலிங்கம்**

லண்டன் ஏடு நிறுவனத்தின் உறுப்பினர் வைத்திய கலாநிதி திரு.அ.பகீரதன் அவர்களின் அன்புத் தாயாரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் அன்பு மனைவியுமான அமரர் மங்கயற்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் மறைவினையிட்டு அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

(சி/4002) ஏடு-கிளிநொச்சி


# இராசி பலன்

14.03.2016
(பங்குனி 01, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
சஷ்டி மாலை 6.52மணிவரை
கார்த்திகை பிற்பகல் 2.52 மணிவரை
சுபநேரம் 12.21-1.51 மணிவரை
இராகுகாலம் 7.51-9.21 மணிவரை
பங்குனித்திங்கள், சஷ்டி விரதம்,
காரடையா நோன்பு

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| சூரி, புத | கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை-சுவாதி | | |
| கேது, சுக் | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்:** காலைப்பொழுதிலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் உருவாகும்.

**இடபம்:** பெருமைகள் வந்து சேர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:** நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** பெற்றோர் மீதான பாசம் கூடும், வளர்ச்சிப் பாதைக்கு வித்திடுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், ரோக பயமுண்டு.

**கடகம்:** வருமானம் அதிகரிக்கும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மகரம்:** சுப செய்திகள் வந்து சேரலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு:** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், பயணங்கள் கைகூடும்.

**துலாம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உறக்கம் குறையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மறதியால் ஒரு சில பணிகளை தவறவிடலாம்.

**கன்னி:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

# இராணுவ பாதுகாப்பு எல்லை வலி.வடக்கில் பின்னகர்த்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருந்த நடேஸ்வரா கல்லூரி விடுவிக்கப்பட்டதனை தொடர்ந்து, இராணுவம் தனது பாதுகாப்பு எல்லையை பின்னகர்த்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. நேற்று முன்தினம் கையளிப்பு நிகழ்வுக்கு முன்னதாக பாடசாலை எல்லையோடு முட்கம்பி வேலிகளை இராணுவம் அமைத்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயர் பாதுகாப்பு வலயத்தில் கடந்த 26 வருடாங்களுக்கும் மேலாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த நடேஸ்வரா கல்லூரி மற்றும் ஆரம்ப பாடசாலை ஆகியவற்றை மக்கள்பாவனைக்கு கையளித்து வைத்தார்.

இவ்வாறு பாடசாலை கட்டடம் கையளிக்கப்பட்டதோடு, அதனோடு இணைந்த காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இராணுவம் தனது உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசிக்கும் பகுதியை சீமெந்து ஆலை அருகாமையில் அமைத்து வைத்துள்ளது. இதில் தல்செவன விருந்தினர் விடுதிக் குள உள்நுழைவோர் தொடர்பில் பதிவுகளையும் மேற்கொண்டு வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடேஸ்வரா கல்லூரி விடுவிக்கப்பட்டதனை தொடர்ந்து உயர பாதுகாப்பு வலயமான தனது நுழைவாயிலை பின்னகர்த்த வேண்டிய தேவை இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பாடசாலை எல்லையோடு புதிதாக முட்கம்பி வேலிகளை அமைக்க ஆரம்பித்துள்ளனர்.

எனினும் முன்னதாக இருந்த நுழைவாயில் நேற்று முன்தினம் வரை அகற்றப்படவில்லை. அங்கு இராணுவத்தின் வழமையான நடமாட்டங்கள் காணப்பட்டன. இராணுவத்தின் சிற்றுண்டி சாலைகள், பேக்கரி உட்பட அனைத்தும் இயங்கு நிலையிலேயே காணப்பட்டன. மேலும் விடுவிக்கப்பட்ட பாடசாலையை சூழ இராணுவ காவலரண்களும் உள்ளன.

இவ்வாறான நிலையில் பாடசாலை ஆரம்பிக்கப்படுமாயின், மாணவர்களால் இயல்பான கல்வியை தொடர முடியாது. ஆகையால் அடுத்த கட்டமாக அங்குள்ள இராணுவ காவலரண்கள் அகற்றப்படல் வேண்டும். பாடசாலைக்கு முன்பாக உள்ள இராணுவத்தின் விற்பனை நிலையங்களும் அகற்றப்படல் வேண்டும் என்ற கோரிக்கை அப்பகுதி மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. (இ-4)

## கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

சித்தங்கேணி பெரியவளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோவில் பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம், எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி முதல் விநாயகர், வழிபாடு யாக பூசைகள், கிரியைகள் நடைபெற்று காலை 7 மணி முதல் 7.45 மணி வரை பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ-17)




## வடக்கில் பாடசாலைகளின் புனரமைப்பிற்கு இந்தியாவின் உதவிகள் வரவேற்கத்தக்கது

### டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் 27 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கும் கிழக்கில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சத்திர சிகிச்சைக்கூட கருவிகளை வழங்குவதற்கும் இந்திய அரசு முன்வந்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், கடந்த காலத்தில் எனது கோரிக்கைக்கு அமைவாக இந்திய அரசு பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தது.

அந்த வகையில் வடக்கிற்கான ரயில் பாதை மீள் நிர்மாணம், யாழ் கலாசார மண்டபம், பலாலி விமான நிலைய அபிவிருத்தி மற்றும் எனது அமைச்சின் கீழ கைத்தொழிற் கிராமங்கள் அமைத்தல், பனை ஆராய்ச்சி நிறுவன மீள் நிர்மாணம், வட கடல் நிறுவனத்திற்கான புதிய இயந்திரத் தொகுதிகள் என பல்வேறு உதவிகளை இந்திய அரசு செய்து கொடுத்துள்ளது.

அதே நேரம் எனது திடீர் கோரிக்கைக்கு அமைவாக 50 ஆயிரம் வீடுகளை எமது மக்களுக்காக நிர்மாணித்துத் தந்துள்ளது.

இந்நிலையில், இப்போது பாடசாலைகள் புனரமைப்பு மற்றும் வைத்திய சாலைக்கான கருவிகள் என இந்தியா மேற்கொண்டு வரும் உதவிகள் எமது மக்களுக்கு இன்றியமையாத பாரிய உதவிகளாகும். அந்த வகையில் எமது மக்கள் சார்பாக இந்திய அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன் என அவர் மேலும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சர்வதேச மகளிர் தின விழா

பண்டத்தரிப்பு மகளிர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தினவிழா பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த. க.வித்தியாலயத்தில் நாளை பிற்பகல் 3 மணியளவில் திருமதி ஜெயமணி யோசப் பின் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் திருமதி நேசரட்ணம் செல்வகுமாரியும் கௌரவ விருந்தினர்களாக பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட் பணி மைக்கல் சவுந்திரநாயகம் அடிகளாரும் யாழ்.மாவட்ட சி.க.கூ.ச. சமாசத்தின் தலைவர் செ.இலகுநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ)

# ஈழத்திற்கென தனித்துவ கலை வடிவம் உருவாக்கப்பட வேண்டியது அவசியம்

### சிறீதரன் எம்.பி.வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் கலை வடிவம் என்ன எமக்கென ஒரு தனித்துவ கலை வடிவம் உருவாக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினா சிவஞானம் சிறீதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சாவகச்சேரி கல்வி வலயம் வருடம் தோறும் நடத்துகின்ற நா நாத்தன வாணம் நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன் விழா மண்டபத்தில் வலயக்கல்வி பணிப்பாளா சு.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

ஒரு இனம் தேசிய இனமாக அடையாளப்படுத்தப்படுவதற்கு கலை, பண்பாடு, நிலம்,மொழி போன்றன அவசியமானவை. ஒவ்வொரு இனமும் தமக்கான அடையாளமாக தனித்துவமான கலையை வைத்திருக்கிறார்கள். சிங்களவாகளுக்கு கண்டிய நடனம், ஐரோப்பியாகளுக்கு ஒரு நடனம், பஞ்சாபியாகளுக்கு ஒரு நடனம் என ஒவ்வொரு இனத்தவாகளும் தமக்கான தனி கலை அடையாளத்தை கொண்டுள்ளார்கள்.

லெமோர்யா கண்டம், குமாரிக்கண்டம் என பல பாரம்பாரிய பண்பாடு கொண்ட இனம் என்று சொல்லிக்கொள்கின்றோம். ஆனால் எங்களுக்கென்று ஒரு கலை இல்லை. பறை இசையா அல்லது கூத்தா எங்களின் அடையாளம் . இது எங்களுக்கே தெரியவில்லை.

ஈழத்தவர்களாகிய எங்களுக்கென்று ஒரு தனியான கலை உருவாக்கப்பட வேண்டும். 2009 இற்கு முற்பட்ட காலத்தில் அதற்கான அத்திபாரம் இடப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது. ஆனால் ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னா அது அடுத்த கட்டத்திற்கு நகர முடியாமல் அப்படியே இருக்கின்றது. நாங்கள் குருஷேத்திரம், கண்ணகி சபதம், மாதவி சாத்திரம், இராமாயணம் போன்ற வரலாறுகளை நடனத்தின் ஊடாக பார்க்கிறோம். அதே போல் எங்கள் கண் முன் நடந்த வரலாறுகளையும் கலைகளின் ஊடாக வெளிப்படுத்த வேண்டும்.

அதற்கான காலம் விரைவில் அமையும். எனவே ஈழத்துக்கான கலை அடையாளத்தை கல்வி புலத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் எனவே இன்று சாவகச்சேரி கல்வி வலயம் முன்னெடுக்கின்ற இந்த நிகழ்வை போல் வடக்கு கிழக்கு எங்கும் இடம் பெறச்செய்ய வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தனது உரையில் தெரிவித்தார். (இ-89)

## வறணிப் பிரதேசத்தில் வங்கிகள் எதுவுமில்லை

(உடுப்பிட்டி)

வறணிப் பிரதேசத்தில் வங்கிகள் எதுவுமில்லை என அங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வறணி பெரிய பிரதேசமாக இருந்த போதிலும் நடமாடும் வங்கிக் கிளையாயினும் அங்கு இதுவரை திறக்கப்படவில்லை எனவும் தமது தேவைகளுக்கு 15 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள நெல்லியடி, கொடிகாமம் பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமையே உள்ளதென அங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் நெல்லியடியில் பல வங்கிகள் இயங்குகின்றன எனவும் அவற்றுள் யாதாயினும் ஒரு வங்கியாவது தமது வறணிப் பிரதேசத்தில் திறக்கப்பட்டால் பெரிதும் நன்மையாக இருக்கும் என அங்குள்ள மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-52)



தென்மராட்சி கல்வி வலயம் வருடந்தோறும் நடத்துகின்ற நாத நர்த்தன வர்ணம் எனும் நடன நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா அரங்கில் இடம்பெற்ற போது... (படங்கள்: கிஷோர்)

# பருத்தித்துறையில் பாடசாலைகள் முன் பாதசாரிகள் கடவை அமைக்கப்படும்

பாடசாலைமாணவர்களின் நலன்கருதி பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு முன்னால் பாதசாரிகள் கடவைகள் அமைக்கப்படவுள்ளதாகபருத்தித்துறை நகராட்சி மன்றம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நகராட்சி மன்றத்தினால் வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் கோரிக்கை ஒன்றும்முன்வைக்கப்பட்டுள் ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையில்நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் பொதுமக்களால் இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட பின்னரே மேற்கண்டவாறு நகராட்சி மன்றம் தீர்மானத்தை முன் வைத்துள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் பருத்தித்துறை நகரில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஒரு வழிப்பாதை நடைமுறையில் பொதுமக்களின் நன்மைகருதி மாற்றத்தினைக் கொண்டு வரவேண்டும் எனப் பலராலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் மகாத்மாகாந்தி சிலை அமைந்துள்ள சந்தி தொடக்கம் நவீன சந்தை முன்பக்க நுழைவாசல் வரையில் பரீட்சார்த்தமாக அமுல்படுத்தப்பட்டிருந்த ஒருவழிப்பாதை நடைமுறையானது இம்மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் நீக்கப்படவுள்ளதாக தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் பருத்தித்துறை நவீன சந்தை கட்டடத் தொகுதிக்கு முன்னுள்ள பாதையும் மீன்சந்தை வீதியும் ஒரு வழிப் பாதையாக தொடர்ந்து இருக்கும் எனவும் தீர்மானம் முன் வைக்கப்பட்டது.

இந்நடைமுறையினை பொதுமக்களும்வாகன சாரதிகளும் சரியான முறையில் பின்பற்றி நவீன சந்தைக்கு முன்னால்ஏற்படுத்தப்படும் தேவையற்ற இடநெரிசலை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பாதசாரிக் கடவைகள் அமைக்கப்படும் பாட சாலைகளாக யாழ். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ். வட இந்து ஆரம்பப்பாடசாலை, யாழ்.பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை, யாழ். தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், யாழ். தம்ப சிட்டி மெ.மி.த.க. பாடசாலை என்பன அமையவுள்ளதுஎன பருத்தித்துறைநகராட்சிமன்றம்மேலும் அறிவித்துள்ளது. (இ-5)




# ஐ.தே.கட்சி தலைவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவு டன் சந்திப்பு ஒன்றை நடத்த வுள்ளனர்.

அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளை துரித கதியில் மேற்கொள்வதற்காக நியமிக்கப்படும் மாவட்ட இணைப்பு கமிட்டிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி கமிட்டிகள் போன்றவற்றின் தலைமைப் பதவி தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த சந்திப்பு நடத்தப்படவுள்ளது.ஐக்கிய தேசியக் கட்சியி ருனக்கும் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியினருக்கும் இடை யில் பதவிகளை பகிர்ந்து கொள்வது தொடர்பில்இந்த முரண்பாட்டு நிலைமை காணப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வின் ஆலோசனைக்கு அமைய கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் தவிசாளர் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்கவுள்ளனர்.

மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைமைப் பதவி தொடர்பில் சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு இடையில் நிலவி வரும் கருத்து முரண்பாடுகளையும் நோக்கில் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட வுள்ளது. (இ-5)

# இசைத்தட்டு வெளியீட்டு விழா

பருத்தித்துறை பழவத்தை ஸ்ரீகாளி அம்பாள் புகழ்பாடும் இசைத்தட்டு வெளியீட்டு விழா இன்றுதிங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோவில்பிரதம குருசிவஸ்ரீ. இபால கிருஷ்ணக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

அருளாசியுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் சிறப்புரையை தெல்லிப் பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனும் வாழ்த்துரையை வர்ணனைக் கலாநிதிமதுரகவி காரை. எம்.பி. அருளானந்தனும் நிகழ்த்துவார்கள். அத் துடன் கலைஞர்கள்கௌரவிப்பும்இடம் பெற்றுநன்றி யுரையைசிவஸ்ரீ. சி.பிரதீ பக்குருக்களும் வழங்க வுள்ளார். இந்நிகழ்வின் மூலம் பெறப்ப டும் நிதியானது தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும். இ


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:27<br>தகைமை/தொழில்:A/L/ ஜேமன் NOT PR<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/5614 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 51 செவ் 8 .ல்<br>உயரம்: 161cm<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/5628 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 39<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:HNDA, NIIT லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/5616 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 25சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5638 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 16<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு மணமகன் வாய் பேசமாடடார்<br>தொ.இ: B/5617 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 20<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5640 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 21<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்:IT/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/5618 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 54<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5641 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )





பதவியால் உயர்ந்தோனுக்கு உயர் வாழ்த்துக்கள்
உயர்திரு. க.க.யோகநாதன் (B.A)

யாழ். தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபராக இருந்து பணி பல புரிந்து கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் சென்ற உயர்திரு.க.க.யோகநாதன் BA அவர்களுக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம். பாடசாலையினை இனிதே வளம்படுத்தி பக்குவமாய் பணி செய்து உயர் நிலைக்குள்ளாக்கி உயர் விருதுகளையும் தேசிய விருதுகளையும் பெற்றுத் தர உழைத்து தங்கியிருந்த உயர் தரத்தினை மீண்டும் துலங்கிட உருவாக்கி விளையாட்டு மைதானமும் உங்கள் காலத்தில் எங்கள் பாடசாலைக்கு வளமாக்கித் தந்த உயர் பணியாளனை வாழ்த்தி இன்று நடக்கும் இனிய விழாவும் ஓங்கிட இன்னும் பல பதவிகள் உயர்ந்திட வாழ்த்தும்

யாழ். தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம்
தலைவர்: கமலினி பாலசுந்தரம்
(முன்னாள் உப அதிபர், யாழ். தும்பளை சிவப்பிரகாச வித்தி)
செயலாளர்: B:சுபாசன், பொருளாளர்: S.ஞானபாலன்
சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள்
மேற்படி பாடசாலை பழைய மாணவர் சங்க உப தலைவர்,
யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை பிரதி அதிபர்,
நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்,
நெல்லண்டை லக்ஷ்மணன் தோட்டம்,
வீரமாகாளி அம்மன், வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தான
ஆதீன கர்த்தா. 077 620 2716
(சி/4006)

# சிறந்த அறிவிப்பாளர் தெரிவில் கிளிநொச்சி மாணவன் முதலிடம்



(பனிக்கன்குளம்)

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற சிறந்த அறிவிப்பாளர்களை தேர்ந்தெடுக்கும் போட்டியில் கிளிநொச்சி மாணவன் முதலிடம் பெற்றுள்ளார்.

நாடு முழுவதும் ஊடகத்துறையினரின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற அனுசரணையுடன் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறந்த அறிவிப்பாளர்களை தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சித்திட்டம், கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்றது.

இதில் 25 மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 38 போட்டியாளர்களின் குரல் பதிவுகள் ஊடகத்துறையினரால் இளைஞர் நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த நடுவர் குழுவினால் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன் உமாசங்கர் சங்கீத் நாடளாவிய ரீதியில் முதலாவது சிறந்த அறிவிப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# பதவிக்கான விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி கற்கை நிலையத்தில் பணியாற்றுவதற்காக செயற்றிட்ட உதவியாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருப்பதுடன் ஆங்கில மொழிப் புலமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தங்கள் சுய விபரக் கோவையை உதவிப் பணிப்பாளர், யாழ்.பிராந்திய நிலையம், கொக்குவில் எனும் முகவரிக்கோ அல்லது 155 ஆம் மைல் கல் , கண்டி வீதி, கிளிநொச்சியிலுள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலோ எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ-12)

# ஓதியமலையிலுள்ள குளங்களை புனரமைத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

(குருமன்காடு)

முல்லைத்தீவு - ஒதியமலை பிரதேசத்தில் காணப்படும் நான்கு குளங்களை புனரமைத்து தமது வாழ்வாதாரத்தையும் இருப்பையும் உறுதிப்படுத்த உதவுமாறு அக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமது கிராமத்தில் கருவேப்பமுறிப்பு, செம்பிகுளம், தனிக்கல்லு, பனையமுறிப்பு ஆகிய நான்கு குளங்கள் காணப்படுவதாகவும் அவற்றையே புனரமைத்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாரம்பரிய பூர்வீக கிராமம் தமது கிராமம் என தெரிவித்த மக்கள், 30 வருட யுத்தத்தினால் தற்போது சிங்கள மக்கள் தமது எல்லை கிராமங்களை ஆக்கிரமித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அவர்கள் வளர்ப்பு யானைகளைக் கொண்டு வந்து தமது கிராமங்களில் இறக்கி விடுவதாகவும், இதனால் தமது பொருளாதாரம் அழிக்கப்பட்டு வருவதாகவும் அம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றால் மக்கள் ஒதயமலை கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிவரும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (2-250)




# வவுனியாவில் இடம்பெற்ற நான்கு விபத்துக்களில் ஐந்து பேர் காயம்

## ஒன்றரை இலட்சம் ரூபா இழப்பு– வவுனியா மின்சார சபையினர் தெரிவிப்பு





(குருமன்காடு)

வவுனியாவில் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்கள் நான்கில் ஐவர் காயமடைந்தனர். இதன்போது மின்சாரசபைக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நான்கு விபத்துச் சம்பவங்களில் ஐந்து பேர் காயமடைந்துள்ளதுடன், மின்சார சபைக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா- ஹொரவப்பொத்தானை வீதியில் பயணித்த முச்சக்கரவண்டி இறம்பைக்குளம் பகுதியில் உள்ள உள்வீதி ஒன்றில் திரும்ப முற்பட்டவேளை தடம் புரண்டு தீப்பற்றி எரிந்து நாசமாகியது.

இதில் முச்சக்கரவண்டி முழுமையாக எரிந்த போதும் எவருக்கும் ஆபத்துக்கள் ஏற்படவில்லை.

தீயை அணைக்க முயற்சி எடுக்கப்பட்ட போதும் அது கைகூடவில்லை.

இதேவேளை புளியங்குளம் சந்தியில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் சாரதி படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி வந்த ஹயஸ் வாகனம் ஏ-9 வீதியில் பிரவேசிக்க முற்பட்ட வேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதனால் அப்பகுதியில் 5 மணித்தியாலயங்கள் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

இவ் விபத்து காரணமாக தமக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் வரையில் இழப்பு ஏற்பட்டுள்ளதாக வவுனியா மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

மற்றுமொரு விபத்து வவுனியா, ஏ-9 வீதி சாந்தசாலை சந்தியில் அமைச்சர் ஒருவரின் வாகனம் மோதியதில் இரு பெண்கள் சிறு காயத்திற்கு உள்ளாகியுள்ளனர். வவுனியாவில் இருந்து ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்கள் சாந்தசோலை நோக்கி திரும்ப முற்பட்ட வேளை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற அமைச்சர் ஒருவரின் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.



இதில் இரு பெண்களும் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

குறித்த வித்து தொடர்பில் இரு பகுதியினரும் சமரசத்திற்கு சென்றமையால் மோட்டார் சைக்கிள் திருத்துவதற்கான செலவு வவுனியா பொலிஸாரால் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

மற்றைய விபத்துச் சம்பவம் வவுனியா - கந்தசாமி கோவில் வீதியில் இடம்பெற்றது. கந்தசாமி கோவில் வீதி வழியாக பயணித்த மோடடார்சைக்கிளை சூசைப்பிள்ளையார்குளம் பகுதியில் இருந்து வந்த இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துக்கள் தொடர்பில் வவுனியா மற்றும் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (2-250-311)

## ஒரு கோடி 34 இலட்சம் ரூபா செலவில்

# இரு பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட இரண்டு பாடசாலைகளில் மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடங்கள் அமைப்பதற்கு ஒரு கோடியே 34 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு கல்வி வலயத்திற் குட்பட்ட மு/அளம்பில் றோமன் கத் தோலிக்க வித்தியாலயத்தில் 120×25 வகுப்பறைக் கட்டடம் அமைப்பதற்கு 67 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், மு/தண்ணீரூற்று இந்து ஆண்கள் தமிழ்க்கலவன் பாடசாலையில் 120×25×2 (கீழ் தளம்) வகுப்பறைக் கட்டடம் அமைப்பதற்கு 66 இலட் சத்து 90 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் ஒரு கோடியே 34 இலட் சத்து 20 ரூபா நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

வகுப்பறைக் கட்டடங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 120 நாட்களுக்குள் முடிவுறுத் தப்பட்டுஎதிர்வரும் 15/07/2016 இற்கு பின்னர் மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)





யாழ்ப்பாணத்தில் இயங்கும் பொன்மணி அறக்கட்டளை நிதியத்தினால் மு/அக்கராயன் மகா வித்தியாலய மாணவர்களுக்கு மிதிவண்டி, மரக்கன்றுகள் என்பன அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. 10 மிதிவண்டிகள், தலா 100 மாமரக்கன்றுகள், தென்னங்கன்றுகள், முருங்கைக்கன்றுகள் என்பவற்றுடன் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடநூல்களும் வழங்கப்பட்டுள்ளன. பொன்மணி அறக்கட்டளை நிதியத்தின் ஸ்தாபகர் குமாரசிங்கம் முத்துக்குமார் பாடசாலைக்கு நேரடியாக சென்று இவற்றினை வழங்கினார்.

# விசமிகளின் நாச வேலையினால்

# புழுதியாற்றுக்குளத்தின் துருசுகள் மண்சாக்குகளால் அடைக்கப்பட்டு நீர் வழிந்தோடும் குடிாய்கள் சேதம்

## விவசாயிகள் திண்டாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட இரணைமடு குளத்தின் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதால் சிறுபோக நெற்செய்கை நிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் பாதிக்கப்படும் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு மாற்றீடாக உபதானிய பயிர்களை செய்கையில் ஈடுபடுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் தீர்மானத்திற்கு அமைய வட்டக்கச்சி பகுதியில் ஏழு விவசாயக் குழுக்களுக்கு சிறுதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.


எனினும் நீர் தேவைப்படும் பட்சத்தில் கிளிநொச்சி மாயவனூர் புழுதியாற்று குளத்து நீர் திறந்து விடப்படும் என்ற உறுதி மொழி வழங்கப்படுமிடத்து தாம் சிறுதானிய பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியுமென ஏழு குழுக்களை சேர்ந்த விவசாயிகள் தெரிவித்த கருத்துக்கு உறுதி மொழியும் வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஒரேயொரு குழுவைச் சேர்ந்த 60 விவசாயிகள், 60 ஏக்கர் நிலப் பரப்பில் பல்வேறுபட்ட சிரமத்திற்கு மத்தியில் உப தானிய பயிர்களான கௌபி, பயறு, உழுந்துஎன்பவற்றைசெய்கை செய்தனர்.

இப்பயிர்களுக்கு நீர் தேவைப்பட்டதன் காரணமாக கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளரினால் புழுதியாற்றுக் குளத்து நீர் திறந்து விடப்பட்டது.

இதனைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் சிலர் சிறுதானிய பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுடன் முரண்பட்டனர்.

இது இவ்வாறு இருக்க நேற்று முன்தினமிரவு சில விசமிகளால் புழுதியாற்று குளத்தின் துருசுகள் மண் நிரப்பப்பட்ட சாக்குகளால் அடைக்கப்பட்டு நீர் வழிந்தோடும் குழாய்கள் சேதப்படுத்தப்பட்டு நாச


கோப்புப்படம்

வேலைகள் இடம் பெற்றுள்ளன.

இதனால் உப தானிய பயிர்ச் செய்கைக்கு நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் திண்டாடியதுடன் தமது பயிர்கள் அழிந்து போகும் நிலையை எட்டியுள்ளதாக சுட்டிக்காட் டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் விசாரணை செய்து பயிர் அழிவை பாதுகாக்க முன்வர வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர். (2-277)




கிளி.கல்வி வலயத்திற்குட்பட்ட

## 43 பாடசாலைகளில் 76 ஆசிரியர்கள் பற்றாக்குறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக் களைக் கொண்ட 43 பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய முக்கியமான பாடங்களைக் கற்பிப்பதற்கு 76 ஆசிரியர்கள் பற்றாக் குறை காணப்படுவதாக கிளிநொச்சி கல்வி வலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட 43 பாடசாலைகளில் நடப்பாண்டில் விஞ்ஞான பாடத்திற்கு 35 ஆசிரியர்களும் கணித பாடத்திற்கு 21 ஆசிரியர்களும் ஆங்கில பா டத்திற்கு 20 ஆசிரியர்களுமாக மொத்தம் 76 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றனர்.

மேற்படி ஆசிரியர்களின் வெற்றிடங்கள் தொடர்பாக வடக்கு மாகாண கல்விய மைச்சு, வடக்கு மாகாண கல் வித்திணைக்களம் ஆகியவற்றிற்கு பாடசாலை ரீதியாக காணப்படும் பாட ரீதியான வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை அனுப்பி வைத்துள்ளதாக கிளிநொச்சி கல்வி வலய அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த கூலர் வாகனம் பனைமரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது

### ஒருவர் பலி; இருவர் படுகாயம்



கூலர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பனை மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இருவரில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் மன்னார் பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய நபர் சிறுகாயங்களுக்குள்ளான நிலையில் உயிர் தப்பினார்.

இச்சம்பவம்நேற்று காலை 6.45 மணியளவில் மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி தோட்டவெளி வீதிக்கு அருகில் நடைபெற்றது.

இவ்விபத்தில் அநுராதபுரத்தில் இயங்கி வரும் டி.ஜீ.ஜீ. கடல் உணவு ஏற்று மதி செய்யும் நிறுவனத்தின் உரிமையாளரான டி.ஜீ.தீபால் சந்தன (வயது 46) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த நிறுவனத்தின் உரிமையாளரும் சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய மூவரும் நேற்று அதிகாலை அநுராதபுரத்தில் இருந்து தலைமன்னாருக்கு கடல் உணவுப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக கூலர் ரக வாகனத்தில் தலைமன்னாரை நோக்கிப் பயணித்தனர்.

இதன்போது; மேற்படி வத்தியூடாக பயணித்துக்கொணடிருந்த போது வாகனத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, வேகக்கட்டுப்பாட்டை இழந்து தோட்ட வெளி பிரதான வீதிக்கு அருகிலுள்ள பனை மரமொன்றுடன் மோதியது. இதன்போது, நிறுவனத்தின் உரிமையாளர் சம்பவ இடத்தில் பலியானார்.

உதவியாளர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் மன்னார் பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, சாரதி சிறு காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிர் தப்பியுள்ளார். இச்சம்பவம் தொடர் புடைய விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

## மூன்று மாதக் குழந்தையொன்று வீடொன்றிலிருந்து சடலமாக மீட்பு

### திருநகரில் சம்பவம்



கிளிநொச்சி திருநகர் கிராமத்திலுள்ள வீடொன்றில் இருந்து மூன்று மாதம் நிரம்பிய குழந்தையொன்று உயிரிழந்த நிலையில் பொதுமக்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம் பெற்றது. இதில் கடந்த 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி பிறந்த நரேஸ் குமார் மதுசாளினி என்ற 3 மாதக்குழந்தையே உயிரிழந்தது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி திருநகர் பகுதி யில் குழந்தை பிரசவத்தின் போது மனநிலை பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் அவரது குழந்தையுடன் வீட்டில் தனியாக இருந்த நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அயலவர் கிளிநொச்சி பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் குழந்தையின் சடலத்தை மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்ததுடன் தாயாரை மேற்படி வைத்தியசாலையில் அனுமதித்தனர். இது தொடர்பான புலன் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

## கள் விற்பனை நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுக

### ஒட்டுசுட்டான் பிர.செயலாளரிடம் கோரிக்கை

மாங்குளத்தில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையத்தை வேறிடத்துக்கு மாற்ற கூறி மாங்குளம் மாதர் சங்கம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாங்குளம் நகரிலிருந்து துணுக்காய் வீதியில் முன்பள்ளியொன்றுக்கு முன்பாக மற்றும் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள குறிப்பாக தொடருந்து நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருப்பதால் பல பிரச்சினைகள் இதனால் எழுந்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் மேற்படி கள் நிலையத்தை அகற்றக்கோரி பலமுறை கோரிக்கை விடப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை அதே இடத்தில் இயங்கி வருவதாக மாதர் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடத்தில் கவனமெடுத்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென மாங்குளம் மாதர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (2-31)

## அடிப்படை வசதிக்குறைபாடுகளுடன் இயங்கிய கற்சிலை கிராமத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு

நீண்டகாலமாக அடிப்படை வசதிக் குறைபாட்டுடன் உள்ள முல்லை கற்சிலைமடு கிராமத்தில் அண்மையில் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. வடக்கு மாகாணசபை உறு ப்பினர் து.ரவிகரனினால் முன் னெடுக்கப்பட்ட இச் சந்திப்பில் கற்சிலைமடு பொதுநோக்கு மண்டபத்தில் நடை பெற்றது.

இச் சந்திப்பில் கிராமத்தின் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருக்கும் பல்வேறு அடிப்படைக்குறைகளையும்கோரிக்கைகளையும் முன் வைத்தனர்.

இதன்போது கிராமத்திற்கான நெல் கொள்வனவுக் களஞ்சியசாலை அமைத் தல், பின்தங்கிய நிலையிலுள்ள இக்கிராமத்தின் மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்துவதற்கான முன்னெடுப் புகள், பாற்பண்ணை செயற்பாடுகளின் மந்தநிலை மற்றும் விளையாட்டுக் கழகத்திற் கான உதவிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளும் அங்கு மக்களால் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் ரவிகரன் கருத்து தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டானில்நெல்கொள்வனவுக் களஞ்சியம் மற்றும் பாற்பண்ணை தொடர்பான கோரிக்கைகளை உரிய பகுதிகளுக்கு கொண்டு சென்று அக் குறைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை இயலுமான வரையில் முயற்சி செய்வதாகவும் விளையாட்டுக் கழகத்திற்கான ஊக்குவிப்பு உதவிகளை தனது 2016 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் வழங்குவதாகவும்தெரிவித்தார். மேலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக கற்சிலைமடு அ.த.க. பாடசா லைக்கு தனது இவ்வாண்டுக்கான நிதியொதுக்கீட்டில் உதவிகள்செய்துள்ளதாகவும்தொடர்ந்தும் கல்வி ஊக்குவிப்புக்களுக்காகதனது பணி தொடரும் எனவும் கூறி குறித்த மக்கள் சந்திப்பை நிறைவு செய்தார். (2-310)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவும்

## ஜனாதிபதியிடம் நேரில் வலியுறுத்தினார் வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

**பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் மீள்குடியேற்றம் ஆகியவற்றை விரைவுபடுத்துமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரடியாக கோரிக்கை முன்வைத்துள்ளார்.**

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நடேஸ்வரா கல்லூரி கையளிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஜனாதிபதியாக பொறுப்பேற்ற காலத்திலிருந்து படிப்படியாக எமது மக்கள் நன்மையை பெற்றுக்கொண்டு உள்ளார்கள். தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் என முன்னைய ஆட்சியாளர்களால் சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்ட கருத்துக்கள் அறுவடை செய்யப்பட வேண்டும்.

நாங்கள் இராணுவத்தை எதிர்க்கவில்லை. இராணுவ கெடுபிடிகளை தான் எதிர்க்கின்றோம். நாங்கள் சிங்கள மக்களை எதிர்க்கவில்லை. சிங்கள பேரினவாதத்தை தான் எதிர்க்கின்றோம். இதனை தென்பகுதி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

எமது மாவட்டத்தில் ஓரளவிற்கு நிலங்கள் விடுவிக்கப்பட்டு கொண்டுள்ளன. தற்போது மிகுதியாக உள்ள ஏறக்குறைய 4 ஆயிரம் ஏக்கர் காணிகளையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது விடுவித்துள்ள 701 ஏக்கர் நிலத்தோடு சேர்த்து மேலும் 400 ஏக்கர் விடுவிக்கப்பட்டால், காங்கேசன்துறை சீமெந்து ஆலையும் விடுவிக்கப்பட்டு விடும்.

போர் முடிவடைந்து ஆறு வருடங்கள் ஆகின்றன. ஆனால் இங்கு இராணுவ பிரசன்னம் குறையவில்லை. பொதுமக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை தற்போதுமுள்ளது. இது போருக்கு பின்னரான மீள் நல்லிணக்கத்தை பாதிக்கும் செயற்பாடாகும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு என கோப்பாய் செல்வபுரத்தில் அமைக்கப்பட்டு வரும் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்படும் வீடுகள் இங்குள்ள காலநிலைக்கு ஏற்றதாக இல்லை. வீட்டுக்கு உள்ளே சில மின்னுபகரண கவர்ச்சி பொருட்கள் தான் வைக்கப்பட்டு உள்ளது. இது மக்களுக்கு ஏற்றதான வீடாக இருக்க முடியாது. இது குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் எவ்வித குற்றச்சாட்டுகளும் இன்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ள எமது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுங்கள். அடுத்து பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குங்கள். இலங்கையில் சாதனை படைத்த ஒரு ஜனாதிபதி என சரித்திரம் போற்ற செயற்படுங்கள் என முதலமைச்சர் மேலும் வலியுறுத்தினார். (இ-4)



யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோப்பாயில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தை சென்று பார்வையிட்டதோடு, உயர்பாதுகாப்பு வலயத்தில் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த நடேஸ்வரா கல்லூரி மற்றும் 701 ஏக்கர் காணிகளையும் விடுவிப்பு செய்தார். இதன் போது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்- உ.சாளின்)

## லோட்டஸ் கோபுரம் 2017 இல் திறக்கப்படும் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

நிர்மாணப்பணிகளில் தடைகள் ஏற்பட்ட போதிலும் கொழும்பு லோட்டஸ் கோபுரத்தின் நிர்மாணப்பணிகள் 2017 செப்டெம்பரில் நிறைவு பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சுனில் எஸ். சிறிசேன இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் லோட்டஸ் கோபுரமே இலங்கையிலும் தென்னாசியாவிலும் உயரமான கட்டடமாக மாறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிர்மாணப் பணிகளில் வாகனத்தரிப்பிடம் மற்றும் கடைத்தொகுதிகள் அமைப்புக்காக மேலும் நிதிகள் தேவைப்படுகின்றன.

சீன அரசாங்கத்தினால் இந்தப் பணிகளுக்காக நிதியை ஒதுக்க முடியாது.

எனவே உள்ளூர் வளங்களே இதற்காக பயன்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக்கோபுரம் 350 மீற்றர் உயரத்தைக்கொண்டது.

இதனை நிர்மாணிக்க 104.3 மில்லியன் டொலர்கள் தேவைப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மகிந்தவின் பிரசாரம் குறித்து மற்றுமொரு முறைப்பாடு பதிவு

கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்காக, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு 36.9 மில்லியன் ரூபா பெறுமதியான நேரத்தை இலவசமாக வழங்கியது என்று முறையிடப்பட்டுள்ளது.

கணக்காய்வு திணைக்களத்தின் பரீட்சிப்பின் போதே இந்த விடயம் வெளியாகியுள்ளது.

இதனைத்தவிர, ரூபவாஹினி தயாரிப்புக்கள் மூலம் இந்த ஒளிபரப்பு நேரங்களின் போது 2.2 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகள் மகிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தேர்தல் பிரசாரங்களுக்கு மகிந்த செலவிட்ட பல மில்லியன் ரூபாய்கள் பணம் செலுத்த வேண்டியுள்ளமை குறித்து விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையிலேயே இந்த ரூபவாஹினி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (இ-5)

# சு.க.பிளவுபட்டால் பாரிய விளைவுகளை ராஜபக்ஷவினர் சந்திக்க நேரிடும்

## ஜனாதிபதி எச்சரிக்கை

**ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிளவுபடுத்தி, கட்சியின் தலைமைக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் நடவடிக்கையில் மகிந்த தரப்பினர் தீவிரமாக செயற்பட்டு வருகின்ற நிலையில் கட்சியை பிளவு படுத்தினால் பாரிய பின் விளைவுகளை ராஜபக்ஷவினர் சந்திக்க நேரிடும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.**

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த மகிந்த ஆட்சியில் தான் எவ்வாறு நடத்தப்பட்டார் என்பது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

"உண்மையாக கூறினால் நான் கட்சியை விட்டு செல்வதற்கு பாதையை அமைத்தது ராஜபக்ஷவினர். எனினும் நான் அவர்களுக்கு எதிராக ஒன் றும் செய்யவில்லை.

எனினும் மகிந்த கட்சியை உருவாக்கி சுதந்திர கட்சியை பிளவுபடுத்தினால் என்னிடம் இருந்து விடு தலை கிடையாது. என்னிடம் அவர்கள் தொடர்பிலான அனைத்து தகவல்களுமுள்ளன.

ஆரம்பத்தில் இருந்து அனைத்தையும் வெளியே எடுப்பேன். அதன் பின்னர் மக்கள் அனைத்து உண்மைகளையும் அறிந்து கொள்வர். அதன் பின்னர் ராஜபக்ஷவினரால் இந்த நாட்டில் வாழ முடியாது.

எனினும், நாட்டு மக்கள் மற்றும் எங்கள் கட்சிக்காரர்கள் மகிந்தவிடமே உள்ளனர். மகிந்தவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும்தொல்லை கொடுப் பதனை மக்கள் விரும்பவில்லை. எங்கள் கட்சி காரர்களும் விரும்பவில்லை.

உங்களால் தலையிட்டு இதனை நிறுத்த முடியாதா?" என மொரிஸ் என்ற உறுப்பினர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

என்னால் மேற் கொள்ள முடிநத விடயம்அல்ல. அதனை பிரதமர் உட்பட குழுவினர் பார்த்து கொள்வார்கள் என்னால் முடியாது" என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

"நாங்கள் தற்போது பெரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளோம். நாங்களும் இந்த கட்சிபிளவுபடுவதனை விரும்பவில்லை. எனினும் கிராமங்களில் மக்கள் மகிந்தவுக்கு ஆதரவாகவே உள்ளனர். நாங்களும் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்றால் கிராமங்களில் எங்களுக்கு அரசியல் செய்ய முடியாமல் போய்விடும். 17ஆம் திகதி இடம்பெறும்பேரணிக்கு நிச்சயமாக நாங்கள் செல்ல வேண்டும். எங்கள் நிலைமையை புரிந்து கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் ஜகன வெலிவத்தை தெரிவித்துள்ளார்.

"ஆம்... ஆம் நீங்கள் கூறும் அனைத்து விடயங்களும் எனக்கு தெரியும். எனினும் நீங்களும்புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று உள்ளது. நான் இன்னும் 5 வருடங்களுக்கு மாத்திரமே அரசியலில் ஈடுபடுவேன். எனக்கு எந்த விதமான பிரச்சினையும் இல்லை. எனினும் நீங்கள் தொடர்ந்து அரசியலில் ஈடுபட வேண்டும். நீங்கள் மகந்தவுடன் சென்றால் மகிநத விழும் குழி யிலேயே நீங்களும் விழுந்து விடுவீர்கள். என்னுடன் செயற்பட்டால் கட்சியில் எதிர்காலம் உங்களுகக உண்டு. அதனை தான நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என மைத்திரி மிகவும் கடுமையாக தெரிவித்துள்ளார்.

கிராமங்களில் மகிந்தவின் புகழ் எவ்வாறு என்பதனையும் மைத்திரியின் புகழ் எவ்வாறு என்பதனையும் மெரில் பெரேரா என்பவர் இதனை போது விபரித்துள்ளார்.

எனினும் மைத்திரி உறுதியாக இருந்தார்.

செல்ல நினைப்பவர்கள் 17ஆம் திகதி செல்லுங்கள் என கூறிவிட்டு ஒரு மணித்தியாலத்தில் ஜனாதிபதி இந்த கலந்துரையாடலை நிறைவு செய்துள்ளார்.(இ-5)

# நெல் சேகரிக்கும் மகிந்த ராஜபக்ஷ





அரசியல் நடவடிக்கைகளிலிருந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, காலை உடற்பயிற்சியில் ஈடுபடுகின்ற அதேநேரம் பொழுதுபோக்கு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்.

அந்த வகையில் அண்மையில் வீயல் வெளியில் நெல் மணிகளை சேகரிக்கும் நடவடிக்கைகளில் மகிந்த ஈடுபட்டுள்ளார். இதன் போது பிடிக்கப்பட்ட சில புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. (இ-5)

# அணுகுண்டை தயாரிக்க யோசனை முன்வைத்த யூத விஞ்ஞானியான அல்பேட் ஐன்ஸ்டீன்

அல்பேட் ஐன்ஸ்டீன் 1879 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஜேர்மனியிலுள்ள உல்ம் என்ற சிற்றூரில ஹெர்மன்ஐன்ஸ்டீன், பாலைன ஐன்ஸ்டீன் என்ற யூத தம்பதியனருக்கு மகனாக பிறந்தார்.


அல்பேட் ஐன்ஸ்டீன் சிறு வயதாக இருந்தபோது இவரது தந்தையர் இவருக்கு ஒரு சட்டை பையில் வைக்கக் கூடிய திசையறி கருவியைக் காட்டினார்.

அந்த வயதிலேயே அவர் ஏதுமற்ற வெளியில்ஏதோ ஒன்று காந்த ஊசியில் தாக்கம் ஏற்படுவதை புரிந்து கொண்டார். சிறு வயதிலேயே எந்தவொரு விடயத்தையும் ஆராயக் கூடியவராக இருந்தார். இதுவே பின்னர விஞ்ஞானியாக இவர் மாறுவதற்கு காரணமாக அமைந்தது.

அணுகுண்டைத் தயாரிப்பதற்கு தேவையான (Theory of Relativity) சார்புக் கொள்கையை ($E = mc^2$) கண்டுபிடித்து 1905 ஆம்ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி வெளியிட்டார். இந்த சூத்திரம தான் அணுகுண்டு தயாரிப்பின் அடிப்படை ஆகும். அமெரிக்காவில் பிரின்ஸ்டன் சர்வகலாசாலையில் இயற்பியல் பேராசியராக பணிபுரிந்தார்.

ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சியில் அணு குண்டைத் தயாரிக்கும் வல்லமை இருப்பதை அங்கிருந்த யூதர்களின் மூலம் அறிந்து கொண்டார்.

1939 இல் ஐன்ஸ்டீன் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற் கான வாய்ப்புக்களை விளக்கி இருந்தார். ஜேர்மனி அணு குண்டு செய்வதை அமெரிக்கா தடுத்து நிறுத்த வேண்டும் அல்லது ஜேர்மனியர்கள் அணுகுணடு தயாரிப்பதற்கு முன்னராக அமெரிக்கா தயாரித்து விட வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தார். அல்பேட் ஐன்ஸ்டீன் ஜேரமனி அணுகுண்டு செய்வதை அமெரிக்கா தடுத்து நிறுத்த வேண்டும் என்பதையே விரும்பினார். ஆனால், அமெரிக்க ஜனாதிபதியோ அணுகுண்டு தயாரிக்க வேண்டும் என்பதையேவிரும்பினார். அமெரிக்க ஜனாதிபதிரூஸ்வெல்ட் ஐன்ஸ்டீனுடன் அணுகுண்டு தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்குமாறு கூறினார்.



ஆனால், அதை ஐன்ஸ்டீன் விரும்பவில்லை. அணு குண்டு தயாரிக்க தேவையான சகல யோசனைகளையும் தருகிறேன். மற்ற விஞ்ஞானிகளைக கொண்டு அவசரமாக தயாரித்துக் கொள்ளுங்கள்.

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வேறொரு விஞ்ஞானியை வைத்து அணு குண்டை தயாரித்தார். இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்த போது அந்த அணு குண்டினால 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6 ஆம் திகதி உலக வரலாற்றில் ஒரு கரும்புள்ளி தோன்றியது.

அதன் தாக்கம் இன்னும் மறையவில்லை. ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா, (3 நாட்களுக்குள்) நாகசாகி ஆகிய நகரங்களின் மீது அமெரிக்கா அணுகுண்டை வீசியது. ஆயிரம ஆயிரம் அப்பாவி உயிர்கள் பலியெடுக்கப்பட்டன. பல ஆயிரம் மககள் ஊனமுற்றனர். இன்றும் அங்கு பிறக்கும் குழந்தைகளில சிலர் மந்தமாக பிறக்கினறனர். அல்பேட் ஐன்ஸ்டீன்தான் கண்டு பிடித்த ஒரு விடயம் மக்களை அழிக்கப் பயன்படுவதை எண்ணி மிகவும்மனம வருந்தினார்ஆக்க வேலைகளுக்கு பயன்படும் என கண்டறிந்த பின்னரே அவரது மனம்சமாதானம் அடைந் தது.

அல்பேட் ஐன்ஸ்டீன் தமது சார்புக் கொள்கைக்காக புகழ் பெற்ற போதிலும் அவருடைய ஒளி மின்விளைவு (Photo Eletcric Effect) ஆராய்ச்சிக்காக இவருக்கு இயற்பிய லுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அல் பேட் ஐன் ஸ் டீன் அமெரிக்காவிலுள்ள பிரின்ஸடன நகரில் 1955 ஆம்ஆண்டு ஏபரல்மாதம்18 ஆம்திகதிதனது 76 ஆவ்து வயதில் காலமானார். உயில மூலமாக தனது மூளையை யும் உடலின் சில பகுதிகளையும் ஆய்வுக்காக தானமாக வழங்கினார்.

இன்று உலகில் அணு உலைகள் மூலமாக ஆயிரக கணக்கான மெகா வோட் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது.

இதன் பலன் மக்களுக்கு நேரடியாக கிடைக்கத்தான் செய்கிறது. ஆனால், உலகம் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகிறது. உலகம் முழுவதும் 437 அணு உலைகள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. இதன் மூலமாக 3,80,250 மெகா வோட் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது.

மேலும் புதிதாக 66 அணு உலைகள் விரைவில் செயற்பட பணிகள் துரிதமாக இடம்பெறுகிறது. அணுசக்திக்கு உலகில் ஆதரவும் எதிர்ப்பும் பலமாக இருக்கிறது. வளர்ச்சி யடைந்த நாடுகள் அணு உலை களை கொஞ்சம் கொஞ்சமாக மூடுவதற்கு முடிவு செய்திருக்கின்றன.

ஆனால், மூன்றாம் உலக நாடுகள் அணு உலைகளை அதிகமாக தொடங்க முடிவு செய்திருக்கின்றன. வளர்ச்சியடைந்த நாடுகள் பல மூன்றாம் உலக நாடுகளில்அணு உலைகளை அமைத்துக் கொடுக்க ஆர்வம் காட்டுவது ஏன்? சாதாரண நாடுகளுக்கு உள்ளேயும் புகுந்து குழப்பங்களை ஏற்படுத்துவதுதான் நோக்கமா?

எனவே, அணு உலைகளை படிப்படியாக மூடிவிட்டு மாற்று மின்சக்தி திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இது அணு உலைகளை வைத்திருக்கும் சகல நாடுகளுக்கும்பொருந்தும்

அல்ஹாஜ்
எம்.எப்.எம். இக்பால்
யாழ்ப்பாணம்

# செய்தித்துளிகள்

## கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

வடமராட்சி (மந்திகை)புலோலி இலந்தையடி தோட்டத்து ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான சம்புரோஷண ஏக குண்டபக்ஷ மகா கும்பாபிஷேக (பெருஞ்சாந்தி) விஞ்ஞாபனம் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.இதனை முன்னிட்டு 17ஆம் திகதி வியாழக்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நடைபெறும். (இ)

## புகையிரதம் மோதியதில் பெண்ணொருவர் மரணம்

(கொழும்பு)

மீரிகமை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் புகையிரதம் மோதியதில் பெண் ஒருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

காலி - எல்பிடிய தலாவ பிரதேசத்தினை சேர்ந்த குறித்த பெண் மீரிகமையில் இருந்து பொல்கஹவெலை நோக்கி பயணித்த புகையிரதத்தில் மோதுண்டதினாலே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## மகனின் தாக்குதலில் தந்தை உயிரிழந்தார்

(கொழும்பு)

35 வயதான மகனொருவனின் தாக்குதலில் 62 வயதான அவருடைய தந்தை பலியான சம்பவம் ஹப்புத்தளை, தம்பேதென்ன மாவுஸ்ஸாகொல்ல பிரதேச்த்தில் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

குடும்ப பிரச்சினை, கைகலப்பாக மாறியதையடுத்தே தந்தையை மகன் தாக்கியுள்ளதாக தெரியவருகின்றது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரை, பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## கலவானையில் பெண் மீது துப்பாக்கிப் பிரயோகம்

### இராணுவ வீரரை தேடி வலைவீச்சு

(கொழும்பு)

கலவான, வேவல்கந்துரே பெல்வத்தையில் 58 வயதான பெண் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததுடன் அவரது மகள் வீட்டுக்கும் சென்று துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகக் கூறப்படும் முன்னாள் இராணுவ வீரரை தேடி வலை விரித்துள்ளத்ாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# தென்கொரியாவை வடகொரியா முழுமையாகக் கைப்பற்றும்

## போரை ஆரம்பித்துவிட்டதாக இராணுவம் நேற்று அறிவிப்பு

(சியோன்)

**அமெரிக்கா-தென்கொரியா இணைந்து ஏற்பாடு செய்துள்ள கூட்டு இராணுவ போர் ஒத்திகை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் தென்கொரியா நாட்டை முழுமையாக கைப்பற்றும் போரில் ஈடுபடப்போவதாக வடகொரியா அறிவித்துள்ளது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.**

வடகொரியா தனது அயல்நாடான தென் கொரியாவை தொடர்ந்து மிரட்டி வருகிறது. இதற்காக அண்மையில் அணுகுண்டு சோதனை, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை போன்றவற்றை நடத்தியது.

தென் கொரியாவுக்கு அமெரிக்கா ஆதரவாக இருந்து வருகிறது. வடகொரியாவை எச்சரிக்கும் வகையில் தென்கொரியாவும், அமெரிக்காவும் கூட்டு போர் ஒத்திகையில் ஈடுபடுகின்றன. இதற்காக இரு நாட்டு படைகளும் கொரிய கடற்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளன. இன்று போர் ஒத்திகை முழு வீச்சில் தொடங்குகிறது.

இந்த நிலையில் வட கொரியா இராணுவம் ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் கூறியிருப்பதாவது.

தென்கொரியாவும் அமெரிக்காவும் சேர்ந்து வடகொரியாவில் ஊடுருவி தாக்கும் நோக்கத்தில் இந்த போர் ஒத்திகையை செய்கின்றன. அவர்கள் வடகொரியாவை தாக்குவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

எனவே, நாங்கள் முன் கூட்டியே போருக்கு தயாராகி விட்டோம். எங்கள் படைகள் எல்லையில் உடனடி தாக்குதல் நடத்தும் வகையில் தயாராகவுள்ளன. எந்த நேரத்திலும் நாங்கள் தாக்குதலை தொடங்குவோம். நாங்கள் போரை தொடங்கி விட்டால் நிறுத்த மாட்டோம். ஒட்டு மொத்த தென் கொரியாவையும் கைப்பற்றுவோம் தலைநகரம் சியோல் உட்பட அனைத்து பகுதியும் எங்கள் கைவசம் வரும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வட கொரியா, தென் கொரியா இடையே கடும் பதற்றம் நிலவுகிறது என மேலும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.(இ-5)

## விஜய் மல்லையாவுக்கு தேவ கௌடா ஆதரவு



பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையாவுக்கு முன்னாள் பிரதமர் தேவ கௌடா ஆதரவு தெரிவித்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தொழிலதிபர் விஜய்மல்லையா வங்கிகளில் பெற்ற ரூ.9 ஆயிரம் கோடி கடனை செலுத்தாமல் வெளிநாட்டுக்கு சென்றுவிட்டார்.

இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், முன்னாள் பிரதமரும் மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சியின் தலைவருமான தேவ கௌடா விஜய் மல்லையாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய தேவ கௌடா, சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளில் தொழில் செய்து வருபவர் விஜய் மல்லையா.

அவர் கர்நாடக மண்ணின் மைந்தர். இந்த பிரச்சினைக்கு பயந்து எங்கும் ஓடி ஒளிய மாட்டார். விஜய் மல்லையா வெளிநாட்டுக்கு தப்பி ஓடவில்லை.

இந்தியாவில் தொழிலில் நட்டமடைந்த பல தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் தஞ்சமடைந்து இருக்கிறார்கள். ஆனால் அவர்களைப் பற்றியெல்லாம் யாரும் பேசுவதில்லை.

மத்திய அரசு விஜய் மல்லையா மீது நடவடிக்கை எடுக்கும் விதமாக செயற்படுவது தவறானது.

மேலும், இத்தகைய போக்கை அனைவரும் நிறுத்தி கொள்ள வேண்டும் என்றும் விஜய் மல்லையாவுக்கு இடையூறு செய்ய கூடாது எனவும் கூறியுள்ளார். (இ-5)

## வடகொரிய நீர்மூழ்கி கப்பல் திடீர் மாயம்;மூழ்கி விட்டதா?

அமெரிக்காவுக்கும், தென் கொரியாவுக்கும் தொடர்ந்து மிரட்டல் விடுத்துக்கொண்டிருக்கிற வட கொரியாவின் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று திடீரென மாயமாகி விட்டது. வடகொரியாவின் கிழக்கு கடல் பகுதியில் இயங்கி கொண்டிருந்த அந்த கப்பலுக்கு என்ன ஆனது என தெரியவில்லை. அது திக்கு தெரியாமல் எங்காவது போய்விட்டதா அல்லது மூழ்கி விட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

வடகொரிய நீர்மூழ்கி கப்பல் காணாமல் போய்விட்டதாக வெளியான தகவல் பற்றி தென்கொரியா விசாரித்து கொண்டிருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

அதே நேரத்தில் இந்த கப்பல் மாயமானது குறித்து அமெரிக்கா கருத்து தெரிவிக்க மறுத்து விட்டது. மாயமான கப்பலை வடகொரியாவின் கடற்படை தேடி வருவதை அமெரிக்க உளவு செயற்கைக் கோள்கள், விமானம், கப்பல் கண்காணித்து வருவதாகவும் அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இருப்பினும் அந்த நீர்மூழ்கி கப்பல் மூழ்கி இருக்கத்தான் வாய்ப்புகள் உள்ளன என்று அமெரிக்காவின் 'யுஎஸ் நேவல் இன்ஸ்டிடியூட்' தகவல் வெளியிட்டுள்ளது. (இ-5)

# ரூ.9 ஆயிரம் கோடி வங்கிக்கடன் மோசடி; ஊடகங்களுக்கு கருத்துக்கூற விரும்பவில்லை

## விஜய்மல்லையா தெரிவிப்பு

பிரபல தொழில் அதிபரான விஜய்மல்லையா கிங்பிஷர் நிறுவனத்தின் உரிமையாளரான இவர் மீது பொதுத்துறை வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடிக்கு மேல் கடன் பெற்று அதனை திருப்பி செலுத்தாமல் மோசடி செய்ததாக புகார் எழுந்துள்ளது.

கடன் பெற்ற விவகாரம் தொடர்பாக விஜய் மல்லையா மீது அமுலாக்க பிரிவு சார்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவருக்கு சம்மனும் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது விஜய் மல்லையா லண்டனில் வசித்து வருகிறார். அங்கு சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் தான் ஊடகங்களுக்கு பேட்டி அளிக்க விரும்பவில்லை என்று விஜய்மல்லையா ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் அவர் தெரிவித்துள்ளதாவது,

இங்கிலாந்து ஊடகங்களால் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டேன். பொது இடம் என்று கூட பார்க்காமல் அவர்கள் நடந்து கொள்ளும் விதம் வேதனை அளிக்கிறது. எனவே நான் ஊடகங்களுக்கு பேட்டி அளிக்க விரும்பவில்லை. எனவே என்னிடம் பேச முயற்சித்து நேரத்தை வீணாக்கி கொள்ளாதீர்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முன்னதாக இங்கிலாந்து பத்திரிகை ஒன்றுக்கு விஜய் மல்லையா கூறும் போது என் மீது பொய்யான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. வங்கி கடன் விவகாரம் எனது தொழில் சார்ந்தது. ஊடகங்கள் என்னை வில்லனாக பார்க்கின்றன.

இப்போது நான் இந்தியா திரும்புவது சரியாக இருக்காது. நேரம் வரும் போது இந்தியா திரும்புவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# உ.பியில் இடி, மின்னலுடன் கனமழை கட்டடம் இடிந்து வீழ்ந்து 5 பேர் பலி



இந்தியாவின் உத்தரப்பிரதேசம் மாநிலத்தின் மீரட் மாவட்டத்தில் இடி, மின்னலுடன் கனமழை பெய்துவரும் நிலையில் மழையால் சேதமடைந்த இரண்டு மாடி கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் மூன்று குழந்தைகள் உட்பட ஐந்துபேர் உயிரிழந்தனர்.


இங்குள்ள கர்கவுடா பகுதியில் நேற்று அதிகாலை சுமார் 4 மணியளவில் ஏற்பட்ட இந்த விபத்தில் விஜய் பால் (வயது 55), கர்ப்பிணியாக இருந்த அவரது மருமகள் சுமன்(வயது 22), சுமனின் பிள்ளைகள் துர்ஜன் (வயது 5), மகேஷ் (வயது 4), குஷி (வயது 2) ஆகியோர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர்.

இடிபாடுகளிலிருந்து உயிருடன் மீட்கப்பட்ட மூன்றுபேர் மாவட்ட தலைமை அரசு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-5)

### காஷ்மீரில் 2 ஆவது நாளாக பெய்த

# மழையால் நிலச்சரிவு

## 73 பேரை இராணுவம் மீட்டது



காஷ்மீரில் 2 ஆவது நாளாக பெய்த மழையால் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கிய 73 பேரை இராணுவம் மீட்டது.

காஷ்மீரில் எல்லை மாவட்டமான குப்வாராவில் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இதனால் பனி படர்ந்த சிகரங்களில் பனிப்பாறைகள் சரிந்து விழுந்தன. பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

தங்தார் - நஸ்தாசுன் இடையேயான வீதிப் போக்குவரத்து துண்டிக்கப பட்டது. நிலச்சரிவில் அங்கு வசித்த மக்கள் சிக்கிக் கொண்டனர்.

உடனே இராணுவத்தினர் நிலச்சரிவு மீட்பு குழுவினர் விரைந்து சென்றனர். அங்கு சிக்கி இருந்த 73 பேரை பத்திரமாக மீட்டனர். இவர்களில் பெண்கள், குழந்தைகள் மற்றும் கடும் குளிரால் பாதிக்கப்பட்டவர்களும் அடங்கும்.

இந்த மழை காரணமாக காஷ்மீரில் கடும் குளிர் நிலவுகிறது.

மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பாகிஸ்தானில் நிலை நிறுத்தப்படும் சீன இராணுவம்



(புதுடில்லி)

சீன இராணுவம் பாகிஸ்தானில் நிலை நிறுத்தப்படும் என்று பாதுகாப்பு முகாமைகள் அரசுக்கு தகவல் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பாதுகாப்பு மற்றும் கட்டமைப்பு விவகாரங்களில் சீனா குறிப்பிடத்தக்க அளவில் ஆதிக்கம் செலுத்துகிறது.

தெற்காசிய பிராந்தியத்தில் தனது வல்லமையை நிலை நிறுத்த ஆர்வம் காட்டும் சீனா, பாகிஸ்தானுடன் நெருக்கமான நட்பை வளர்த்து வருகிறது, இந்த இரு நாடுகளுக்கு இடையேயான தரைவழி தொடர்பை மேற்கொள்ளும் ஒரே வழியாக கில்கிட்-பல்சிஸ்தான் மண்டலம் விளங்கி வருகிறது.

46 பில்லியன் டொலர் மதிப்பில் பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் இடையேயான பொருளாதாரப்பாதை இந்த வழியாகத்தான் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கு இந்தியா கடும் ஆட்சேபம் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரப்பாதையில் 3000 கிலோ மீற்றர் தொலைவில் சீன படைகள் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் என்று அரசிடம் பாதுகாப்பு முகாமைகள் தகவல் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானும் படையின் அளவை உயர்த்தி உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பொருளாதாரப்பாதையில் சீன இராணுவம் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவது இந்தியாவிற்கு கவலைக்குரிய விடயம் ஆகும்.

பாகிஸ்தானின் கணிசமான பகுதிகளில் கூடுதல் படைகள் நிறுத்தப்படுவதற்கும், கில்கிட்-பல்சிஸ்தான் பகுதியில் சீன ராணுவம் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதற்கும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் சீன இராணுவம் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதற்கும் இந்தியா ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சீன படைகள் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இவ் விவகாரத்தை தொடர்ந்து தீவிரமாக கண்காணித்து வருகிறோம், பாகிஸ்தானில் குறிப்பிடத்தக்க அளவில் சீன படைகள் நிறுத்தப்படும் என்ற நியாயமான யோசனையானது எங்களிடம் உள்ளது," என்று அரசு தரப்பு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பிராந்தியத்தில் பிரச்சினையை ஏற்படுத்தும் விவகாரத்தில் இரு நாடுகளும் தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

தீவிரவாதம் மற்றும் பிற விவகாரங்களில் பாகிஸ்தானுக்கு எதிராக ஐ.நா.வில் இந்தியா மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் சீனா எதிர்ப்பாக இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அல்கொய்தா தீவிரவாதிகளின் பயிற்சி முகாம் ஜார்க்கண்டில்



(ராஞ்சி)

கடந்த ஜனவரி மாதம் டில்லி பொலிஸார் அல்-கொய்தா தீவிரவாத இயக்கத்தில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் முகமது ஆசிப், ஜாபர்மசூத், முகமது அப்துல் ரஹ்மான், சையது இனசார்ஷா அப்துல்ரமி ஆகிய 5 பேரை கைது செய்தனர்.

முகமது ஆசிப்புக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய கால அவகாசத்தை நீட்டிக்கக் கோரி புதுடில்லி நீதிமன்றில் பொலிஸார் மனு தாக்கல் செய்தனர்.

மனுவில், ஜார்க்கண்ட் மாநிலத்தில் அல்கொய்தா தீவிரவாத முகாம் செயற்பட்டதாக அதிர்ச்சி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மனுவில் கூறியிருப்பதாவது,

ஜார்க்கண்ட் மாநிலத்தில் இருந்து அபுசுபியன் என்பவன் பாகிஸ்தானுக்கு சென்று அல்கொய்தா, லஷ்கர்-இ-தொய்பா ஆகிய தீவிரவாதி அமைப்புகளிடம் பயிற்சி பெற்று இந்தியா திரும்பி உள்ளான். அவனை தேடி வருகிறோம்.

இவனும், கைது செய்யப்பட்டுள்ள அப்துல்சமியும் இணைந்தே தீவிரவாத பயிற்சி பெற்றுள்ளனர்.

கைதான அனைவரும் ஜார்க்கண்ட் காட்டுப் பகுதியில் பயிற்சி முகாமை அமைத்து இருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

அந்த முகாம் எந்த இடத்தில் இருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டியுள்ளது என்று கூறியுள்ளனர்.

ஆனால் இதை ஜார்க்கண்ட் மாநில பொலிஸார் மறுத்து உள்ளனர். ஜார்க்கண்டில் எந்த தீவிரவாத பயிற்சி முகாமும் இயங்கவில்லை என்று தெரிவித்துள்ளனர். (இ-5)

### போர் நிறுத்தத்தை பொருட்படுத்தாது

# அரச படைப்போர் விமானத்தை சுட்டு வீழ்த்திய புரட்சியாளர்கள்



(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டின் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக மக்களும், மக்கள் ஆதரவு புரட்சிப்படையினரும் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிரியா அரசுக்கு ஆதரவாக ரஷ்யாவும், கிளர்ச்சியாளர்களுக்கு மறைமுக ஆதரவாக சவுதி அரேபியாவும், அமெரிக்காவும் உள்ள நிலையில் அரசுக்கும் எதிர்ப்பு குழுக்களுக்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தை நடந்தால்தான் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வரும் என்பதால் ஐக்கிய நாடுகள் சபையின் யோசனைப்படியும், அமெரிக்காவின் தலையீட்டினாலும் இருதரப்பினருக்கும் இடையில் சமாதான பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

சிரியாவில் அமைதி நிலவ நிரந்தர தீர்வை ஏற்படுத்துவது தொடர்பாக ஜேர்மனி நாட்டின் முனிச் நகரில் 17 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சாகள்பங்கேற்றஉயர்மட்டஆலோசனைக் கூட்டம் கடந்த மாதம் நடைபெற்றது. ஜெனிவா நகரில் இன்று நடைபெறும் இரண்டாம் சுற்று பேச்சுவார்த்தையில் நிரந்தரப் போர்நிறுத்தம் ஏற்படும்என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், மேற்கு சிரியாவின் ஹமா மாகாண வான்வெளியில் நேற்று முன்தினம் பறந்த சிரியா அரசுக்கு சொந்தமான போர் விமானத்தை ஹவுத்தி படையினரை சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு ஜைஷ் அல் நஸ்ர் என்ற புரட்சிப்படை பொறுப் பேற்றுள்ளது.

தற்காலிக போர் நிறுத்த உடன்படிக்கையை மீறிய வகையில் அமைந் துள்ள போராளிகளின் இந்த நடவடிக்கையால் இன்று அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெறுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (இ-5)

## பனிச்சரிவில் சிக்கி 6 பேர் உயிரிழப்பு

இத்தாலியில் நேற்று முன்தினம் ஆல்ப்ஸ் மலைத் தொடரில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 6 மலையேற்ற வீரர்கள் பலியாகினர்.

மலையேற்றக் குழுவினர் நேற்று முன்தினம் ஆஸ்திரியா எல்லைக்கு மிக அருகில் உள்ள மோன்டே நேவோசோ பகுதியின் உச்சியை நெருங்கிய போது திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் பல வீரர்கள் சிக்கிக்கொண்டனர்.

தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் 3 ஹெலிகாப்டர் மூலம் சம்பவ இடத்திற்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். 6 பேர் இறந்துள்ளதாகவும், சிலர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் மீட்புக் குழு வனர் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து மீட்பு பணி நடைபெற்று வருவதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

பனிப்பொழிவு அதிகமாக இருப்பதால் ஹெலிகொப்டரின் எடையை குறைப்பதற்காக குறைந்த எரிபொருளுடன் பறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது மீட்புப்பணிக்கு சவாலாக உள்ளது. (இ-5)

# பிளாஸ்டிக் பொருட்களை அழிக்கும் பக்டீரியா

## ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



பிளாஸ்டிக்கினால் பாட்டில்கள் மற்றும் பல்வேறு பொருட்கள் உருவாக்கப்படுகின்றன.

இந்த பொருட்கள் விரைவில் அழியக்கூடிய தன்மை கொண்டது அல்ல.

தெருக்களிலும், பொது இடங்களிலும் வீசப்படும் இந்த பொருட்கள் நீண்டகாலம் அழியாமல் இருக்கின்றன.

இதன் மூலம் நச்சு வாயுக்கள் உருவாவதுடன் பல்வேறு விதமான சுற்றுச் சூழல் மாசுகளையும் ஏற்படுத்துகிறது.

பொதுவாக எல்லாவிதமான பொருட்களையும் பக்டீரியாக்கள் தின்று அழித்து விடும்.

இதனால் சுற்றுச் சூழல் பாதிப்பு தவிர்க்கப்படும்.

ஆனால், பிளாஸ்டிக் பொருட்களை மட்டும் பாக்டீரியாக்கள் சாப்பிடுவது இல்லை.

இதன் காரணமாக அவை அழியாமல் பூமியிலேயே கிடக்கின்றன. இந்த நிலையில் ஜப்பான் நாட்டு விஞ்ஞானிகள் பிளாஸ்டிக் பொருட்களையும் தின்று அழிக்கக்கூடிய பாக்டீரியாக்கள் இருப்பதை கண்டுபிடித்துள்ளனர்.

இது தொடர்பாக அங்குள்ள கொயட்டா பல்கலைக்கழகம், கெயோ பல்கலைக்கழகம் ஆகியவற்றை சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

அங்குள்ள பாட்டில் மறு சுழற்சி தொழிற்சாலையில் அவர்கள் ஆய்வு செய்த போது பிளாஸ்டிப் பொருட்களையும் அழிக்க கூடிய பக்டீரியாக்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த பக்டீரியாக்களை அதிக அளவில் உற்பத்தி செய்து பிளாஸ்டிக் பொருட்களில் பரவவிட்டால் அவை அழிந்துவிடும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதன் முலம் பிளாஸ்டிக் பொருட்களை அழிப்பதற்கு புதிய தீர்வு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ-5)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 90 | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 65 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 160 | 150 | 160 | 200 | 120 |
| தக்காளி | 50 | 30 | 30 | 30 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 60 | 50 |
| கோவா | 50 | 40 | 40 | 60 | 80 | 50 |
| கரட் | 100 | 100 | 90 | 80-160 | 160 | 120 |
| பூசணி | 40 | 30 | 25 | 40 | 80 | 60 |
| புடோல் | 50 | 30 | 30 | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 60 | 50 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 100 | 65 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 180 | 120 | 100 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 30 | 70 | 120 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 50 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 70 | 60 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 50 | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 140 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 300 | 300-400 | 600 | 500 |
| போஞ்சி | 120 | 160 | 60 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 | 60 | 120 | 90 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 20 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 80 | 100 | 100 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 35-45 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 150 | 200 | 100 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 60 | 80 | 100 | 120 | 70 |
| முள்ளங்கி | 30 | 40 | 30 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | – | – | – | – |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன் நடந்தது என்ன? 130

### ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தம்

இலங்கையில் நடந்து வரும் போரை எப்படியும் நிறுத்த வேண்டும் என்று பிரதமர் ராஜீவ்காந்தி விரும்பினார். இது பற்றி இந்திய அதிகாரிகளும், இலங்கை அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதன் விளைவாக ஒரு ஒப்பந்தம் தயாராகியது.

அப்போது நடந்த சம்பவங்களைப் பற்றி பாலசிங்கம் எழுதியிருப்பதாவது,

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியா-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பாக நானும் பிரபாகரனும் முதலமைச்சர் எம்.ஜி. ஆரை டில்லியில் சந்தித்தோம். அதுவே எங்கள் கடைசி சந்திப்பாக அமைந்தது.


இந்த இக்கட்டான சூழ்நிலையில் நிகழ்ந்த இறுதிச் சந்திப்பிலும் எம்.ஜி.ஆர் எங்களுக்கு அனுசரணையாக நின்று எங்கள் நிலைப்பாட்டை ஆதரித்தார்.

புதுடில்லியில் நிகழ்ந்த அந்தச் சந்திப்பின் பின்னணியே ஒரு விசித்திரமான கதை.


1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி தலைவர் பிரபாகரன், யோகி, திலீபன் ஆகியோருடன் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முதல் செயலர் ஹர்தீப் பூரியையும் ஏற்றிக் கொண்டு இந்திய விமானப் படையின் விமானம் ஒன்று சுதுமலை அம்மன் கோவில் மைதானத்திலிருந்து சென்னைக்கு புறப்பட்டது.

பிரபாகரனையும் மற்றவர்களையும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சந்திக்குமாறு சென்னையில் இருந்த எனக்கு தகவல் தரப்பட்டது.

மீனம்பாக்கம் சென்றபோது அவர்கள் எனக்காக காத்து நின்றார்கள். நாம் அவசரமாக டில்லிக்கு செல்ல வேண்டும். ஒரு முக்கிய விடயமாக பிரதமர் ராஜீவ்காந்தி என்னைச் சந்திக்க விரும்புவதாகக் கூறி இந்திய தூதரக அதிகாரி பூரி என்னைக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்துவிட்டார்



என்று பிரபாகரன் என்னிடம் சொன்னார். இதில் ஏதோ தில்லு முல்லு இருப்பதாக எனக்குத் தோன்றியது. எனினும் இந்தியப் பிரதமர் விடுத்த அழைப்பை நிராகரிப்



பது நாகரிகம் அல்ல. எதற்கும் டில்லி சென்று பார்ப்போமே என்று நினைத்தேன்.

ஓர் இந்திய விமானப்படை விமானத்தில் டில்லி சென்றோம். அங்கு அசோகா ஓட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

### கரும் பூனைகள்

அது ஓர் ஐந்து நட்சத்திர ஓட்டல். டில்லியில் மிகவும் பிரபல்யமானது. விமான நிலையத்திலிருந்து ஆயுதம் தாங்கிய காவல் துறையினரின் பாதுகாப்புடன் சென்று கொண்டிருந்த எங்கள் வண்டி விடுதியின் முன் வாயிலை அடைந்த போது அங்கு பல நூற்றுக்கணக்கான இந்திய ராணுவ அதிரடிப் படையினர் (கறுப்புச் சீருடை அணிந்த கரும் பூனைகள்) விடுதிக்கட்டடத்தைச் சூழ நிற்பதைக் கண்டோம்.

நாங்கள் சந்தேகத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதைக் கண்டதும் உங்களுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்றார் பூரி.

கரும் பூனைகள் சூழ விடுதியின் அதி உயர மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். ஆளுக்கு ஓர் அறையும் கலந்துரையாடுவதற்கு ஒரு கூடமுமாக அந்த மாடியின் ஒரு பகுதி எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

எங்கள் அறைகளுக்கு முன்பாகவும் மாடி முழுவதுமாகவும் ஆயுதம் தரித்த கரும் பூனைகள் பாதுகாப்பாக நின்றன.

சிறிது நேரத்தில் இந்த ஒப்பந்தத்துக்கு பிரபாகரனின் சம்மதத்தைப் பெற ராஜீவ் விரும்பினார் அதனால் பிரபாகரனை டில்லிக்கு அழைத்து வரச் செய்தார்.

### தடுப்புக்காவல்

இந்தியப் புலனாய்வு உயர் அதிகாரி ஒருவர் அங்கு வந்தார். எங்கள் பாதுகாப்புக்காக நாங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் ஓட்டலை விட்டு வெளியேற எங்களுக்கு அனுமதி இல்லை என்றும் தொலைபேசி மூலம் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாது என்றும் நிலைமையைத் தெளிவுபடுத்தினார்.



(தொடரும்)

# மினி வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ளது

மினி வரவு செலவுத் திட்டமொன்றை அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ளது. எதிர்வரும் மாதத்தில் அரசாங்கம் இடைக்கால வரவு செலவுத் திட்டமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாத இறுதி வாரத்தில் அரசாங்கத்தின் வருமானத்தை விருத்தி செய்வது குறித்து ஆராயும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இந்த ஆய்வுகளின் பின்னர் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் விசேட பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

இதன் போது ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ள இணக்கப்பாடுகளின் அடிப்படையில் இடைக்கால மினி வரவு செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடவுள்ளது.

இதன் ஊடாக மத்திய வங்கியின் நில ஒதுக்கங்களை வலுப்படுத்திக்கொடுக்க 150 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகைக்கு மேலதிகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஜப்பான் போன்ற தரப்புக்களிடமிருந்து 1800 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெற்றுக் கொள்ளப்படவு ள்ளது.

இந்தக் கடன்களுக்கு மேலதிகமாக அபிவிருத்தித் திட்டங்களுக்காக சீனாவிடமிருந்து கடன் தொகை பெற்றுக் கொளஎப்படவுள்ளது. (இ-5)

## மாடிக் கட்டடத்திலிருந்து விழுந்து சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

மெதிரிகிரிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பகஸ் வேவ பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி கட்டடத்திலிருந்து விழுந்து 13 வயது சிறுமி ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கட்டடத்தில் சிறுமி மேலும் பலருடன் நின்று கொண்டிருந்த வேளையிலேயே விழுந்துள்ளார்.

காயமடைந்த சிறுமி மெதிரிகிரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

### லசந்த படுகொலை தொடர்பான

# ராணுவக் கூட்டுப்படையினரின் உரையாடல் குறித்து விசாரணை

(கொழும்பு)

**சண்டேலீடர் செய்தித்தாளின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை இடம்பெற்ற வேளையில் இராணுவக் கூட்டுப்படை தலைமையகத்துக்கு கிடைத்த தொலைபேசி அழைப்புக்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.**



இதற்கான பணிப்புரை சீஐடிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சீஐடியினர் முழுமையான விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

கூட்டுப்படை தலைமையகத்துக்கு வந்த தொலைபேசி அழைப்புக்களில் லசந்தவின் கொலை தொடர்பான விடயங்கள் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையிலேயே இந்த விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

ஏற்கனவே தொலைபேசி கலந்துரையாடல் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்ட போதும் பின்னர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பாதாள உலகக்குழு தலைவர்களுக்கு அரசியல்வாதிகள் சிலர் அடைக்கலம்

(கொழும்பு)

பாதாள உலகக் குழுத் தலைவர்களுக்கு அரசியல்வாதிகள் அடைக்கலம் வழங்கியுள்ளதாகத் தெரவிக்கப்படும் நிலையில் பாதாள உலகச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

எனினும், திட்டமிட்ட வகையில் நாட்டில் பாரியளவில் குற்றச் செயல்களில் ஈடுபடும் பாதாள உலகக் குழுக்களின் முக்கியஸ்தர் களுக்கு ஏழு அரசியல் வாதிகள் அடைக்கலம் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாதாள உலகக் குழுச் செயற்பாடுகளை உரிய வகையில் கட்டுப்படுத்த முடியவில்லை என பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனை, கம்பஹா, மாளிகாவத்தை, மினுவன்கொட, கடுவெல, கொலன்னாவ, மாத்தறை, காலி போன்ற பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் பாதாள உலகக் குழுக்களுக்கு இவ்வாறு அரசியல்வாதிகள அடைக்கலம் வழங்கியுள்ளனர்.

இதனால் சட்டத்தை அமுல்படுத்த முயற்சிக்கும் அதிகாரிகளினால் தமது கடமைகளை சரிவர செய்ய முடியவில்லை.

பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் புலனாய்வுப் பிரிவினரைக் கொண்டு கடந்த அரசாங்கம் பாதாள உலகக்குழுக்களை கட்டுப்படுத்தியிருந்தது.

இந்த நடவடிக்கைகளினால நாடடை விட்டு வெளியேறியிருந்த பாதாள உலகக் குழுவினர் தற்போது மீளவும் நாட்டுக்கு வந்துள்ளனர்.

முக்கிய அரசியல்வாதிகளின் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு தற்போது அவர்களின் அடைக்கலத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

சர்வதேச பொலிஸாரினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள கொட்டகாமினி மற்றும் தெல்பாலா ஆகியோர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது கடல் வழியாக இலங்கை வந்து மேல் மாகாண அரசியல்வாதி ஒருவரின் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டு பின்னர் மீளவும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

# அமைச்சர்களின் அழுத்தம் காரணமாக லெஸ்லி டி சில்வா பதவி நீக்கப்பட்டார்

பாரிய ஊழல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் லெஸ்லி டி சில்வா, இரண்டு அமைச்சர்களின் அழுத்தங்கள் காரணமாகவே பதவியில் இருந்து அகற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் இந்த அழுத்தத்தை பிரயோகித்ததாக ஆங்கிலச் செய்தித்தாள் ஒன்று தெரவித்துள்ளது. சில்வாவை பதவியில் இருந்து அகற்றாது போனால் தாம் பதவி விலகப் போவதாக அநத அமைச்சர்கள் பயமுறுத்தினர்.

குறித்த இரண்டு அமைச்சர்களுக்கு எதிராகவும் நடத்தப்பட்ட விசாரணைகளே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமக்கு எதிரான விசாரணைகளை இரண்டு அமைச்சர்களும் கைவிடச் செய்துள்ளார்கள் என் றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## நேரமும் தரமும்

நேரத்தை மிச்சம் பிடிக்க எண்ணுகிறவர்கள் தரத்தைக் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

அதே போல் தரத்தையே பார்ப்பவர்கள் நேரத்தைக் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

அப்படியானால் நேரமும் தரமும் ஒன்றுடன் ஒன்று இணையாதவையா? அவை ஒன்றுக் கொன்று எதிரியா? இக் கேள்விகளுக்கு ஆம் என்று பதிலளிப்பவர்கள் நுனிப்புல் மேயும் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

நேரத்தையும் மிச்சப்படுத்தித் தரத்தையும் நம்மால் பாதுகாக்க முடியும்.

இங்கே தரம் என்ற சொல் முழுமையும் நிறைவையும் தரக் கூடிய எந்த ஒரு செயலையும் குறிப்பதாகும்.

வீட்டில் மெதுவாகக் குளிப்பார் மெல்லத் தலை வாருவார் அசைந்து அசைந்து அன்னம் போல் நடைபயில்வார் சாவகாசமாகச் சிரித்துப் பேசிக் கொண்டு சாப்பிடுவார். ஆனால் வாகனத்தில் ஏறி அமர்ந்து விட்டலோ விரட்டு விரட்டு என்று விரட்டுவார். வீதியில் அறைபட்டுச் சாவார்!

இப்படித் தன்னையும் அறியாமல் தற்கொலை செய்து கொள்ளும் தவறைத்தான் இன்று பெரும்பாலானோர் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதாவது

எங்கு,எதில்,எவ்வளவு நேரத்தைச் செலவிட வேண்டும் என்ற நிதானம் தெரியாமல் நடந்து கொள்கிறார்கள்.

தேவையற்ற விடயங்களில் பொழுதை விரயமாக்கி விட்டு தரத்தைக் காப்பாற்ற வேண்டிய நேரத்தில், நேரம் வீணாகிறது வீணாகி விட்டது என்று துடிக்கிறார்கள்.

அந்தப் பதற்றம் அவர்களை நிம்மதியாக வேலை செய்ய விடுவதில்லை.

விளைவு?

மற்றவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாகுமளவிற்குத் தரம் பாதிக்கப்படும்

சிலர் வேறு வகையில் தவறிழைக்கிறார்கள். அதாவது அவர்கள் சிந்தனையையும் செயலையும் ஒருங்கிணைத்துக் குவிக்காமல் செய்யும் செயலை ஒருமைப்பாட்டின் மையக் கேந்திரமாக எண்ணாமல் திணறுவார்கள். இங்கேயும் நேரத்திற்கும் தரத்திற்குமிடையே போர் நடந்து இரண்டினுள் ஒன்று மடியத் தான் செய்யும்.

தேவையற்ற வேலைகளைச் செய்வதைக் குறைத்து கொள்வதன் மூலமும் தூக்கத்தை உடல் இணங்கும் வகையில் குறைத்துக் கொள்வதன் மூலமும் நம்மால் நேரத்தை மிச்சப்படுத்த இயலும்.

ஆனால் தரத்தின் இழப்புத் தகுதிக்கே ஆபத்தை உண்டாக்கிவிடும்.

ஆக,

நம்முடைய தவறான அனுமானங்களைச் சரி செய்து கொண்டு குளறுபடியான கொள்கைகளையும் நடைமுறைகளையும் மாற்றிக் கொண்டு செய்யும் செயலிலேயே முழுச் சிந்தனையுடன் ஈடுபட்டால் நேரமும் தரமும் இணைந்து நடந்து வெற்றிப் பாதைக்கு நம்மைக் கைகோர்த்து அழைத்துச் செல்லும்.

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்

1383

## கவலையா இருக்கு!



கிருஷ்ணதேவராயருக்கு ஒருநாள் திடீரென்று ஒரு எண்ணம் உண்டாயிற்று. யாரைப் பார்த்தாலும், அதைப் பற்றிக் கவலை, இதைப் பற்றிக் கவலை என்று கூறுகிறார்களே, கவலை இல்லாத மனிதர்களே நாட்டில், இல்லையா என்று எண்ண ஆரம்பித்தார்.

இதுபற்றி அப்பாஜியிடம் கேட்கலாமே, அவர் என்ன கருத்துத் தெரிவிப்பார் என்று எண்ணியவராக அவரிடம் கூறினார். அவர் அதற்கு எதுவும் பேசாமல் இருந்தார்.

பின்னர், மன்னரிடம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கவலையுண்டு என்று சொல்லிப் பார்த்தார். அதில் மன்னர் திருப்திப்படவில்லை.

"அப்பாஜி, நீங்கள் ஒரு சுற்றுப் பயணம் சென்று வந்தால் நல்லது. உங்களுக்கும் இந்தப் பிரச்னைகளிலிருந்து விடுதலை கிடைக்கும்.

ஒன்றிரண்டு நாட்கள் இவ்விதம் பயணம் மேற்கொணடால் புதிய, புதிய சிந்தனைகள் உங்களுக்கு ஏற்படும். அப்படியே, கவலை இல்லாத மனிதனை அறிந்து கொள்ளலாம்" என்று கூறவும் அவர் புறப்பட்டார்.

"கவலை இல்லாத மனிதனை நிச்சயம் கண்டுபிடிக்க முடியாது. முதலில் சொன்னது போலப் புதிய சிந்தனைக்ள் நிச்சயம் பிறக்கத்தான் செய்யும்.

பல்வேறு மக்களைச் சந்திக்கும் போது நமக்கும் புதுப்புது எண்ணங்கள் பிறக்கும்" என்று எண்ணியவராக அப்பாஜி புறப்பட்டார்.

அரண்மனையை விட்டு நீண்ட தூரம் வந்து விட்டார்.

அது ஒரு சிறிய கிராமம். நல்ல பசுமையான புல்வெளி அந்தப் புல்வெளியில் குதிரையும் கொஞ்சம் மேயும், நாமும் யாரிடமாவது வாயைக் கிண்டிப் பார்க்கலாம் என்று எண்ணியவராக அங்கு இறங்கினார்.

"அங்கு ஒரு வயலின் பக்கத்திலுள்ள குடிசையின் முன்புறத்தில் நார்க்கட்டிலைப் போட்டுக் கணவனும், மனைவியும் பேசிக கொண்டிருந்தனர்.


அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தால் மிகவும மகிழ்ச்சியுடன் காணப் படுபவர்கள் போலத் தோற்றம் அளி ததனர். எனவே, அவர்கள் கவலையில்லாமல் இருந்தால் இவர்களையே கூட்டிக் கொண்டு சென்றுவிடலாம். நமக்கு நடையும் இலாபம்" என்று எண்ணி அவர் களைப் பார்த்துப் புன்னகையுடன் சென்றார்.

தங்களைப் பார்த்துத் தலைமையமைச்சர் வருவதைப பார்த்த அவர்கள் இருவரும் எழுந்து வணக்கம் தெரிவித்தனர்.

பதில் வணக்கம் தெரிவித்த அப்பாஜி அவர்களிடம் மகிழ்ச்சியுடன் பேச்சுக் கொடுத்தார்.

பின்னர் "உங்களுக்கு எந்த விதக் கவலையும் இருக்காது என்று எண்ணுகிறேன்," என்று ஆரம்பித்தார்.

"கவலை இல்லை தான். இருந்தாலும் என் மனதில் உள்ளதை உங்களிடம் சொன்னால்தான் என் மனப்பாரம் குறையும்" என்று ஆரம்பித்தார்.



### ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் ஜேர்மனியில், வுர்ட்டெம்பர்கிலுள்ள உல்ம் என்னுமிடத்தில், 1879 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் குறிப்பிடத்தக்க பயன்பாடடுக் கணிதத் திறமைகள் கொண்ட, ஒரு கோட்பாட்டு இயற்பியல் அறிஞர் ஆவார். இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான அறிவியலாளராகப் பொதுவாகக் கருதப்படுகிறார். இவர் புகழ்பெற்ற சார்புக் கோடபாட்டை முன் வைத்ததுடன், குவாண்டம் எந்திரவியல், புள்ளியியற் எந்திரவியல் (statistical mechanics) மற்றும அண்டவியல் ஆகிய துறைகளிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார். ஒளிமின் விளைவைக் கண்டுபிடித்து விளக்கியமைக்காகவும், கோட்பாட்டு இயற்பியலில் (Theoretical physics) அவர் செய்த சேவைக்காகவும், 1921ல் இவருக்குப் இயற்பியலுக்கான நோபல் பரிசு வழுங்கப்பட்டது.

தற்காலத்தில் பொதுப் பயன்பாட்டில் ஐன்ஸ்டைன் என்ற சொல், அதிக புத்திக்கூர்மையுள்ள ஒருவரைக் குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது. 1999 ல், புதிய ஆயிரவாண்டைக் குறித்து வெளியிடப் பட்ட டைம் (இதழ்), "இந்த நூற்றாண்டின் சிறந்த மனிதர்" என்ற பெயரை ஐன்ஸ்டீனுக்கு வழுங்கியது.

ஐன்ஸ்டீன் தந்தையார், ஹேர்மன் ஐன்ஸ்டீன், பிற்காலத்தில் ஒரு மின்வேதியியல் சார்ந்த தொழில் நிலையமொன்றை நடத்தி வந்தார். தாயார் போலின் கோச். இவர் ஒரு கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலையில் சேர்க்கப்பட்டார்.

அத்துடன் தாயாரின் வற்புறுத்தல் காரணமாக இளமையில் வயலினும் கற்று வந்தார். இவர் ஐந்து வயதாக இருந்தபோது, இவரது தந்தையார் இவருக்கு ஒரு சட்டைப்பையில் வைக்கக்கூடிய திசையறி கருவியொன்றைக் காட்டினார். அந்த வயதிலேயே அவர் ஒன்றுமற்ற வெளியில் ஏதோ ஒன்று காந்த ஊசியில் தாக்கம் ஏற்படுத்துவதைப் புரிந்து கொண்டார்.

அவர் மாதிரியுருக்களையும், இயந்திரக் கருவிகளையும், பொழுது போக்காகச் செய்து வந்தார். எனினும், சிறுவனாக இருந்தபோது இவருக்கு மிக மெதுவாகவே கற்க முடிந்தது எனச் சிலர் கூறுகிறார்கள். இவர் தனது 12 ஆவது அகவையிலேயே கணிதம் படிக்க ஆரம்பித்தார்.

இவருடைய உறவினரிருவர் அறிவியல், கணிதம் தொடர்பான நூல்களையும், ஆலோசனைகளையும் கொடுத்து, அவரை ஊக்குவித்தார்களாம்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1489 - சைப்பிரஸ் மகாராணி கத்தரீன் கோர்னாரோ தனது இராச்சியத்தை வெனிஸ் நகருக்குக் விற்றார்.
- 1794 - எலிவிட்னி பஞ்சைத் தூய்மைப்படுத்தி அதன் விதையிலிருந்து பிரித்தெடுக்கும் காட்டன் ஜின் என்ற இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1898 - டாக்டர் வில்லியம் கப்ரியேல் றொக்வூட், இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பட்டார்.
- 1939 - செக்கோசிலவாக்கியாவின் பொஹேமியா மற்றும் மொராவியா மாகாணங்களை ஜேர் மனியப் படைகள் ஆக்கிரமித்தனர்.
- 1951 - கொரியப் போர்: இரண்டாவது முறையாக ஐ.நா படைகள் சியோல் நகரைக் கைப்பற்றியது.
- 1978 - ஸ்ரேலியப் படைகள் தெற்கு லெபனானை ஆக்கிரமித்துக் கைப்பற்றியது.
- 1984 - சின் ஃபெயின் தலைவர் ஜெரி ஆடம்ஸ் பெல்ஃபாஸ்ட் நகரில் கொலை முயற்சி ஒன்றில் படுகாயமடைந்தார்.
- 1994 - லினக்ஸ் கரு (kernel) 1.0.0 வெளியிடப்பட்டது.
- 1995 - ரஷ்ய விண்கப்பல் ஒன்றில் அமெரிக்கர் ஒருவர் முதன் முதலாகப் பயணித்தார்.
- 1998 - தெற்கு ஈரானில் 6.9 ரிக்டர் அளவு நிலநடுக்கம் தாக்கியது.

**பிறப்புக்கள**

- **1879 - அல்பர்ட் ஐன்ஸ்டீன், இயற்பியலாளர் (இ. 1955)**
- 1965 - அமீர் கான், நடிகர்

**இறப்புக்கள்**

- 1883 - கார்ல் மார்க்ஸ், ஜெர்மனிய மெய்யியலாளர் (பி. 1818)
- 1932 - ஜோர்ஜ் ஈஸ்ற்மன் அமெரிக்க கண்டுபிடிப்பாளர (பி. 1854)
- 1995 - வில்லியம் பவுலர், இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1911)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மனித உரிமை ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளைக் கண்டித்து ***அவள் இல்லாத உலகம்*** என்ற தொனிப் பொருளில் அமைந்த விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று கடந்த வியாழக்கிழமை வேலணை வங்களாவடிச் சந்தியில் இடம்பெற்றது. இதில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் ,வேலணைப்பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும் தொழில் திணைக்கள ஊழியர்கள்,மகளிர் அமைப்புகளது பிரதிநிதிகள் சட்டத்திற்கும் மனித உரிமைக்கான கற்கை நிறுவனத்தைச் சார்ந்தோர் பாடசாலை மாணவர்கள்,வைத்திய அதிகாரிகள்,தாதிய உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சமூக சேவையாளர்களை வெளிக்காட்டி சமூகப்பணிகளில் ஈடுபட தூண்ட வேண்டும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**இன்றைய காலகட்டத்தில் சமூக சேவையாளர்கள் வெளிக்காட்டப்பட வேண்டும். அதன் மூலம் மற்றவர்கள் அறம் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபடுவதை தூண்டவேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநா யகன் தெரிவித்துள்ளார்.**



கல்விக் காருண்யன் ஈ. எஸ். பி. நாகரத்தினத்தின் மணிவிழா நிகழ்வும் "நாகரத் தினமாலை" மலர் வெளியீ டும்நேற்றையதினம்யாழ்சேர். பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண் டபத்தில் நடைபெற்றது.அதில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.அவர்மேலும் உரை யாற்றுகையில்,

இன்றைய காலகட்டத் தில்சமூகப்பணிகள் அறச்செய ல்களில்ஈடுபடுவது குறைவடை ந்து சமூகத்தை பாழா க்கும் செயல்களில் பலர் ஈடு பட்டு வருவதை காண முடி கிறது.

தமது வருமானத்துக்காக எதுவும்செய்ய தயாராக உள்ள வர்களை கண்முன்னே காண்கிறோம். குறுகிய காலத் துக்குள் பல்வேறு விதமான வர்களை பாாக்கிறோம். தனி யார் துறையாக இருந்தாலும் சரி ,அரச துறையாக இருந் தாலும் சரி பலர் பிழையான வழிகளில் உழைப்பதை யும் காண்கிறோம். இப்போ தைய காலத்தில் எப்படியும் வாழலாம் என்று இருக்கி றார்கள்.

ஆனால் சமூகத்துக்கா கவே பல்வேறு வழிகளில் உதவி செய்பவர்களும் எம் மத்தியில் உள்ளார்கள். நாங் கள் பிழையான வழிகளில் செய்யும் எந்தவொரு செயற் பாட்டுக்கும் எதிர்விளைவு நிச்சயமாக வந்து சேரும்.

தமக்கு கிடைக்கும் ஊதி யத்தை வைத்து சமூகத்து க்கு பணிபுரிபவர்கள் மிகவும் குறைவாக காணப்படுகிறார் கள்.சமூக சேவை மிகவும் உன்னதமான பணி ஆகும். அதை செய்பவர்களுக்கு இறை வனின் அருள் தொடர்ந்து கிடைக்கும் என்பது நியதி.

சமூகசேவைகள் செய் பவர்கள் வெளிக்கொண்டு வரப்பட்டு அவர்களின் செயல் கள் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்கு வேண் டும். அதன் மூலமே சிறந்த மனிதர்களை எமது சமூக த்தில் உருவாக்கி அனை வரும் நன்மையடைய முடி யும் என அவர் மேலும் தெரி வித்தார். (இ-9)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 661

Search for people, places and things — Nagendram Home


### தர்ஷினி




### செல்வன்




### ரதி



### மது




### அமிர்தன்




### சங்கவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மகிந்தவின் அரசியலில் தேங்காய்







கறுப்பு மந்திர சூனியங்கள் மற்றும் தேங்காய் உடைப்பு வழிபாடு போன்றன இலங்கை ஜனாதிபதிகளை வீட்டிற்கு அனுப்புவதுடன், அரசாங்கங்களையும் கவிழ்க்குமாயின், 2009 இல் மகிந்த வீட்டிற்கு அனுப்பப்பட்டிருப்பார்.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.**

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது விசுவாசிகளின் அரசியலில் தேங்காய்கள் மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகவும் அதன் உறுப்பினர்களுக்கு எதிராகவும் கோயில்கள் மற்றும் விகாரைகளில் பல நூறாயிரக்கணக்கான தேங்காய்கங்களை உடைப்பதன் மூலம் பயனுள்ள பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என மகிந்தவும் அவரது விசுவாசிகளும் நம்புகின்றனர்.

'தேங்காய்களை உடைப்பதன் மூலம் தற்போது நிலைமைகள் முன்னேற்றமடைகின்றன' என மகிந்த ராஜபக்ஷ கண்டியிலுள்ள தலதா மாளிகையில் வழிபாட்டில் ஈடுபடுவதற்காக சென்றபோது அதன் நுழைவாயிலில் நின்றவாறு தெரிவித்தார்.

ராஜித சேனாரட்ன சத்திர சிகிச்சைக்காக சிங்கப்பூர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது, இலங்கையின் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிரான தேங்காய் உடைப்பு வழிபாடு தமக்குச் சாதகமான பலனைத் தந்துள்ளதாக மகிந்த விசுவாசிகள் சமூக ஊடகங்களில் தெரிவித்தனர். இதேபோன்றே வணக்கத்திற்குரிய மாதுளுவாவே சோபித தேரர் சிங்கப்பூரில் காலமாகிய போது, மகிந்த விசுவாசிகள் தமது தேங்காய் உடைப்பு பிரார்த்தனை வீண்போகவில்லை எனத் தெரிவித்தனர்.

அமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன இறந்தவேளையிலும் கூட, மகிந்தவிற்கு குணவர்த்தன இழைத்த அநியாயத்திற்கான பலனைத் தற்போது அனுபவித்துவிட்டார் என மகிந்த விசுவாசிகள் முகப்புத்தகம் மற்றும் சமூக ஊடகங்களில் சுட்டிக்காட்டினர்.

எண்பது வயதான அரசியல்வாதி பேராசிரியர் விஸ்வ வர்ணபால கடந்த வாரம் இறந்த வேளையிலும் இதையே மகிந்த ராஜபக்ஷவின் விசுவாசிகள் கூறினர். விஸ்வ வர்ணபால கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதனையும் செய்யவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

சிங்கப்பூர் வைத்திய சாலையில் ராஜித மாற்று வழி இணைப்பறுவை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போது, மகிந்தவிற்கு துரோகமிழைத்தமைக்கான தண்டனையை ராஜித தற்போது அனுபவிப்பதாக மகிந்த விசுவாசிகள் பரப்புரை செய்தனர். இவ்வாறான விடயங்களை மகிந்த விசுவாசிகள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டுள்ளதுடன், தேங்காய்களை உடைப்பதன் மூலம் அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியும் என இவர்கள் எண்ணுகின்றனர்.

பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்க றொஸ்மீட்டிலிருந்த அவரது வதிவிடத்தில் படியில் சறுக்கிக் கீழே விழுந்தார். இவர் அந்த வேளையில் தனது மகன் அனுராவுடனான கருத்து முரண்பாட்டால் மன அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தார்.

சிறிமாவோ மேலதிக சிகிச்சைக்காக வெளிநாட்டிற்குச் சென்றிருந்தார். அவர் நீண்ட காலமாக அரசியலிற்குத் திரும்பாது ஓய்வில் இருந்தார். இதே காலப்பகுதியில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அனுருத்த ரத்வத்தை, கண்டியிலிருந்து பயணித்துக் கொண்டிருந்த வேளையில் வீதி விபத்திற்கு ஆளாகினார். இவரது காலொன்றில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதனால் நீண்டகாலமாக இவர் அரசியலிலிருந்து ஓய்வெடுத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்கு பிரேமதாஸ மந்திரக் கோலை உபயோகிக்கிறார் என்ற கருத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பொதுவான நம்பிக்கையாகக் காணப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரேமதாஸவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்ட வேளையில், நாடாளுமன்றின் எதிர்க்கட்சி இருக்கைகளில் மலையாள வசீகர எண்ணெயை பிரேமதாஸ ஊற்றியதாக லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்க, போன்றவர்களும் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் தெரிவித்தனர்.

இதற்கு முதல் நாள் இரவு பிரேமதாஸ, நாடாளுமன்றில் மலையாள மாந்திரீகப் பூசை ஒன்றை மேற்கொண்டதாகவும் வதந்திகள் பரப்பப்பட்டன. இதுமட்டுமல்லாது, பிரேமதாஸ தனது ஜனாதிபதிப் பதவியைப் பாதுகாப்பதற்காக மலையாள மந்திரக் கோல் சடங்கில் ஈடுபடும் வல்லுனர்களை வரவழைத்ததுடன், இவருக்கு ஏழு கன்னிப் பெண்கள் பால் அபிசேகம் செய்ததாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரால் வதந்தி பரப்பப்பட்டது.

நாட்டில் கன்னிப் பெண்கள் காணாமற் போகின்றனர் என்கின்ற பரப்பரையையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பத்திரிகை ஒன்றின ஊடாகப் பரப்பினர்.

இவ்வாறான வதந்திகள் எவ்வளவு தூரம் உண்மை என்பதற்கப்பால், பிரேமதாஸ, மாய மந்திரச் சடங்கில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பது உண்மையாகும். அத்துடன் இவர் சோதிடத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தார். அதற்காக பிரேமதாஸ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மீது மந்திரக் கோல் சடங்கை மேற்கொண்டிருந்தார் எனக் கருத முடியாது.

பிரேமதாஸ தனது ஜனாதிபதிப் பதவியைத் தக்கவைத்திருப்பதற்காக இவ்வாறான சடங்குகளை மேற்கொண்டார் எனக் கூறப்பட்டாலும் கூட, இவரால் இவரது பதவியையும் உயிரையும் பாதுகாக்க முடியவில்லை. பிரேமதாஸ, விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பிரேமதாஸவை விட, கறுப்பு மந்திரக் கோல் சடங்குகள் மீதும் சோதிடம் மீதும் மகிந்த ராஜபக்ஷ அதிக நம்பிக்கை கொண்டுள்ளார். இவ்வாறானதொரு பின்னணியைக் கொண்ட ஒருவரையே மகிந்த தனது வைத்தியராகத் தெரிவு செய்தார். பிரேமதாஸ தனக்கென எந்தவொரு சோதிடரையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் மகிந்த தனக்கென சோதிடர் ஒருவரை வைத்திருந்தார்.

தான் கொல்லப்பட்டு விடுவேனோ என்ற அச்சம் மகிந்தவிற்கு இருந்தது. சோதிடர் சந்திரசிறி பண்டார, மகிந்த துன்பகரமான சாவைச் சந்திக்கப் போகிறார் என எதிர்வு கூறியதன் காரணமாக, இவர் சிறையிலடைக்கப்பட்டார்.

மற்றத் தலைவர்களைப் போலல்லாது, மகிந்த தான் போகும் இடமெல்லாம் தனது கையில் கறுப்பு மந்திரக் கோலைக் கொண்டு சென்றுள்ளார்.

மகிந்தவின் கறுப்பு மந்திரக் கோல் மீதான நம்பிக்கை தொடர்பாக அனைத்துலக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. சந்திரிகா மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினரை வசப்படுத்துவதற்கான மலையாள கறுப்பு மந்திரக் கோல் சடங்கொன்றை மகிந்த மேற்கொண்டிருந்தார் என்ற வதந்திகள் பரப்பப்பட்டன.

மந்திரக் கோல் மற்றும் சோதிடம் போன்றவற்றில் மகிந்த கண்மூடித்தனமான நம்பிக்கை கொண்டிருந்த வேளையில், அனோமா பொன்சேகா தனது கணவர் சரத் பொன்சேகா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் எனக்கோரி விகாரைகளில் தேங்காய்களை உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டார். அனோமாவின் இந்தச் செயலை மகிந்தவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனினும், இந்த வழிபாட்டால் மகிந்தவிற்கு எவ்வித தீங்கும் ஏற்படவில்லை.

இவர் தொடர்ந்தும் பத்தாண்டுகள் ஜனாதிபதியாக பதவி வகித்துள்ளார். இவருக்கு முன்னாள் நாட்டை ஆண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் சந்திரிகா ஆகியோர் தமது ஆட்சிக் காலங்களில் மகிந்தவை விட ஓராண்டு காலம் அதிகமாகவே ஆட்சி செய்தனர்.

20ம் பக்கம் பார்க்க...

# உங்களுடைய வழி தனி வழியாக இருக்கட்டும்

மார்ஷல் கோல்ட் ஸ்மித் எழுதிய இந்தப் புத்தகம் தெளிவான சிந்தனைகளை எளிதான முறையில் எடுத்துச் சொல்லுகிறது. வெற்றி பெற்றவர்கள் ஏன் மீண்டும் வெற்றி பெறுகிறார்கள்.? கடின உழைப்பு என்றாவது கைமேல் பலன் தந்தது உண்டா? செய்யும் வேலைகளை திறமையாகச் செய்தாலும் சில நேரங்களில் வெற்றி தட்டிப் போவது ஏன்? கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒன்று வெற்றியின் விளிம்பில் ஏறும் பொழுது தள்ளிவிடுகிறதே அது ஏன்? அந்த எரிச்சலூட்டும், வெற்றிக்கு மாறான சிறிய செய்கை என்ன? ஒரு சாதாரண ஆளுமை குணாதிசயம்நம்மை அறியாமலேயே தடைசெய்து கொண்டிருப்பதை அறிவீர்களா? இது போன்ற கேள்விகளுக்கு தனிநபர்களுக்கும், நிறுவன மேலாளர்களுக்கும், தலைவர்களுக்கும் எளிதில் புரியும் வண்ணம் எழுதிய கருத்துகள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.


வணிக நிறுவனங்களில் திறமை வாய்ந்த ஆண்களும் பெண்களும் கடின உழைப்பால் மேல் தட்டுக்கு பதவி உயர்த்தப்படுகிறார்கள். அரிதான விதிவிலக்காக சில நேரங்களில் உயர் அதிகாரிகள் புத்திசாலிகளாகவும், திறமைசாலிகளாகவும் மற்றவர்களை வசீகரிக்கும் வண்ணம் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுள்ளும் ஒரு சிலரே உச்சிக்கு போகின்றார்கள். ஏனென்றால் எது ஒருவரை வெற்றிக்கு தள்ளியதோ அதே காரணி மறுபடியும் வெற்றிக்கு உதவாது என்பதுதான் இந்த புத்தகத்தின் ஒரு வரிக்கதை.

**வெற்றியின் முரண்பாடுகள்?**

கூரிய பற்களோடு ஒரு கரடி நீரில் இருந்து துள்ளி குதிக்கும் சிறு மீனை பிடித்துவிடுவதை போன்ற ஒரு விளம்பரம் என்ன செய்தியை உங்களுக்கு கூறுகின்றது என்ற கேள்விக்கு இரு வேறு பதில்கள் கிடைத்தன. 1.அந்த மீன் கரடியின் வாயில் விழும் 2. கரடியின் வாய்க்கு அருகில் இருந்தாலும் அந்த மீனை கரடியால் பிடிக்க முடியாது.

இதில் பெரும்பாலானவர்கள் கரடியை போல மீனை எளிதில் பிடித்துவிடுவேன் என்ற முதல் விதியை பின்பற்றுவதால் மன உளைச்சலுக்கும் எரிச்சலுக்கு ஆளாகி தோல்வியை தாங்க முடியாமல் போகின்றார்கள். மாறாக, இதுவரை கரடி வாயில் விழுந்த மீன்களை போல நானும் விழமாட்டேன் என்ற விதியை பின்பற்றுபவர்கள் சென்ற முறை கிடைத்த வெற்றி நிச்சயமாக இந்த முறையும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை புறம் தள்ளுகின்றார்கள். ஆகவே 2-வது விதியை பின்பற்றுபவர்கள் வெற்றி அடைந்தால் களிக்கமாட்டார்கள், தோல்வி அடைந்தால் குமைந்து போக மாட்டார்கள்.

நம்மை நாமே எப்படி ஏமாற்றிக் கொள்கின்றோம்?. நம்முடைய சாதனைகளையும் பங்களிப்பையும் எவ்வாறு நம்புகின்றோம் என்பதற்கு கீழ்கண்ட விளக்கங்களை காணலாம். பங்களிப்பை அதிகமாக மதிப்பிடுதல்




மற்றவர்களைக் காட்டிலும் தொழில் சார்ந்த திறமைகளில் மிகவும் சிறந்தவர்கள் என்ற தவறான உயர்ந்த எண்ணத்தை வளர்த்தல்

செயல்பாடுகளில் மிக அதிக லாபம் ஈட்டுவதாக எண்ணிக் கொண்டு உண்மையான மற்றும் மறைமுக செலவீனங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளாதிருத்தல்.

எந்த ஒரு செயலும் நேர்மறையாக வலுவூட்டும் வண்ணம் இருந்தால் அந்த செயல் பழக்கமாக மாறி விடுகின்றது. சில நேரங்களில் இந்த வெற்றி, 'வெற்றியின் முரண்பாடாக' திரிந்து விடுகின்றது. இந்த வழி வெற்றிக்கு உதவியது. வெற்றி அடைய அடுத்த முறையும் இதே வழியை பின்பற்றுவேன் என்பதுதான் வெற்றியின் முரண்பாடு. தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளும் வெற்றி பெற்ற மனிதர்கள் மோசமானவர்கள் என்று சொல்ல இயலாது. வெற்றி பெறுபவர்கள் அனைவரும் தவறான நம்பிக்கையில் வெற்றி பெறுகின்றார்கள் என்பது மோசமான உதாரணம் ஆகாது. நம்மை பற்றிய அற்புதமான எண்ணங்களும், நம்பிக்கையும் தன்னம்பிக்கையை தூண்டி வளரச் செய்கின்றன.

தவறான நம்பிக்கைகள் வெற்றியைத் தந்தாலும் மாற்றத்தைத் தடுத்துவிடும். வெற்றி, முரண்பாடுகளை தாண்டி வருவதற்கு 'எந்த செயல் இங்கு சேர்த்ததோ அந்த செயல் மீண்டும் வெற்றிக்கு துணைவராது' என்ற நம்பிக்கையை வளர்த்து கொள்வதோடு விழிப்போடு இருக்க வேண்டும். எந்த நிறுவனத்திலும் மளமளவென வெற்றிபடிக்கட்டுகளில் ஏறினாலும் திடீர் என்று எரிச்சலூட்டும் சின்ன சின்ன பழக்கவழக்கங்கள் பூதாகரமாக பார்க்கப்படும்:

**வேண்டாத பழக்கங்கள்**

நடத்தை திருத்துதலுக்கு உட்பட்டது. மாற்றம் என்பது எல்லா மனித திறமைகளுக்கும் சார்ந்தது. உதாரணமாக நன்றி சொல்ல மறப்பவர்கள் அதை ஒரு முக்கியமான நிகழ்வாக நினைத்து அடிமனதில் இருந்து நன்றி சொல்ல பழகிக் கொள்ள வேண்டும். நன்றி கூறுவது என்பது ஒருவரை புகழ்வதற்கு அல்ல மாறாக நம்முடைய பணிவையும், அடிமனதில் இருந்து எழக்கூடிய உணர்வுகளையும் வகைப்படுத்தி நன்றி அறிதலோடு நினைத்து பார்க்கின்றோம். நமக்கு பிடித்தமான செயல்களை செய்யும் பொழுதோ அல்லது கோபம் உண்டாகும் பொழுதோ உணர்ச்சிவசப் படுக்கின்றோம். அவ்வாறு உணர்ச்சி வசப்படும் போது இந்த உலகே நம்மை வேடிக்கை பார்க்கின்றது. இந்த உணர்வு பூர்வமான சறுக்கலை எதிர்கொள்ளுவது மிகப் பெரிய சவாலாகும். இது போன்ற நேரங்களில் எரிச்சலூட்டும் சில செயல்களை செய்து கொண்டே இருப்போம். அந்த எரிச்சலூட்டும் செயல்களில் ஒன்று இரண்டை வரிசைப்படுத்தி நடத்தையில் மாற்றம் கொண்டு வர வேண்டும்.

ஒரே நாளில் அனைத்து நடத்தைகளையும் மாற்றிக் கொள்ள முடியாது. ஒரு மிகப் பெரிய கட்டிடம் கட்டுவதற்கு ஒவ்வொரு கல்லும் முக்கியமானதாகும். அதே போல நீட்டிக் கொண்டிருக்கும் இரண்டொரு கற்களை மட்டும் எளிதில் எடுத்து விடலாம். கட்டிடத்தின் ஒரு பகுதியை முழுவதும் உடனே மாற்ற வேண்டும் என்றால் இழப்பு கட்டிடத்திற்கு மட்டுமல்ல கட்டுபவருக்கும் என்று சேர்ந்தே இருக்கும்.

நடத்தையில் மாற்றங்களை கொண்டு வர நடந்தவைகளை நினைத்து மகிழ்ந்து பாராட்டிக் கொள்வதை விட மாற்றத்தைத் ஏற்படுத்த முனைந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். உண்மையை கூறி நடக்கக் கூடாதவைகளை தவிர்த்துக் கொள்வது புத்திசாலித்தனம். உடன் பணிபுரிபவர்களிடம் மாற்றங்களை கொண்டு வரும் பொழுது அவர்களுக்கு என்ன தேவையோ, எதை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்களோ அது போன்ற நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டும், மற்றவர்களிடம் நடத்தை பற்றிய மாறுதல்களை ஏற்படுத்தும் பொழுது படிப்படியாக தொடர்ந்து ஊக்குவித்தல் அவசியம். தொடர்புகள் வலுவானதாகவும், குறிப்பிட்ட கோணத்திலும் இருக்க வேண்டும். உதாரணமாக், கடந்த மாதங்களில் இருந்ததை விட வரும் மாதங்களில் நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் எந்த அளவில் பயன் தரும் என்று அவர்கள் புரிந்துக் கொள்ளும் வகையில் செயல்பட வேண்டும்.

எந்த ஒரு பெரு நிறுவனத்திலும் நேர் மறையான மாறுதல்கள் நடத்தையில் ஏற்படுவதற்கு அவை மிகவும் சிறிய அளவில் இருந்தாலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். "வளர்ந்து வரும் பெரும்பான்மையான தலைவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றி அறிந்துகொள்வதில் அவசியமில்லை. மாறாக, எதைத் தவிர்க்க வேண்டும், எதைக் குறைக்க வேண்டும் எதை மாற்ற வேண்டும் என்பதை பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசியம்". ஏதேனும் ஒரு சிறிய அளவில் மாற்றம் நேரும் பொழுது அது முன்னேற்றத்திற்கு உத்திரவாதம் அளிக்கும். இதுவரை நீங்கள் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு இருந்தால் நிச்சயமாக உங்களை நீங்களே மாற்றிக் கொள்வதற்கு வாய்ப்புகள் அதிகம். நன்றி கூறுவதற்கு பழகிக் கொள்வதற்கும் தேவையானவை களை மாற்றிக் கொள்வதற்கும் என்று 20 வித்தியாசமான படிப்படியான முறைகளை சுய முன்னேற்றத் திற்கு நூல் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார்.

ஏனென்றால், இந்த புத்தகத்தின் மையக்கருத்து மிகவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தாக்கத்தைத் தரக்கூடிய ஒன்று. இதுவரை அடைந்த வெற்றிகள் முரண் பாடுகளின் அடிப்படையில் இருந்தாலும் அதுவே சரியென்று ஏற்றுக் கொள்வது தான் நம்முடைய வழக்கமாக இருந்து வந்துள்ளது. அதிலிருந்து விலகி எரிச்ச லூட்டும் சிறிய பழக்க வழக்கங்களைத் தவிர்த்து புறந் தள்ளி நேர்மறையான, தேவையான புதிய மாற்றத்திற்கு உட்பட்ட நடத்தைகளை பின்பற்றுவதன் மூலம் ஒளிமையமான, மகிழ்சியான, வளமான, எதிர்கால வெற்றிகள் வந்து சேரும். உங்களுடைய ஏதேனும் ஒரு எரிச்சலூட்டக் கூடிய தேவையில்லாத எந்த ஒரு செயலையாவது நீங்கள் முயன்று மாற்றங்களை ஏற்றுக் கொண்டீர்களானால் அடுத்த சுற்றில் வெற்றி அடையும் பொழுது உங்களுடைய வழி தனி வழியாக இருக்கும் என்று நூல் ஆசிரியர் அறிவுரை கூறுகிறார்.




# போனால் வராது பொழுது போனால் கிடைக்காது?

தொழில் ரகசியம்

எப்போதுவேண்டுமானாலும் தொலைந்து விடலாம் என்று உணரும் போதுதான், அதன் மீது அதிக அன்பு உருவாகும் என்றார் ஆங்கில எழுத்தாளர் 'கில்பர்ட் செஸ்டர்டன்'. அதிகமாக இருக்கும் எதன் மதிப்பும் நமக்குத் தெரிவதில்லை. இன்னும் சொல்லப்போனால் ஈசியாய் கிடைக்கும் அல்லது கிடைக்காமல் இருப்பதில்தான் எந்த ஒன்றின் மதிப்பும் அமைகிறது. இதை உளவியலாளர்கள் ஹபற்றாக குறை கோட்பாடு' (The Scarcity Principle) என்றழைக்கிறார்கள்.

அதிகம் கிடைக்காத, அடிக்கடி அமையாத, நிறைய இல்லாத எதன் மீதும் நமக்கு ஒரு ஈர்ப்பு வரும். எல்லாமுமே பற்றாக்குறை கோட்பாட்டின் கைங்கர்யம்தான்.

பற்றாக்குறை கோட்பாடு வாழ்ககையின் பல விடயங்களைப் பாதிக்கும் தன்மை கொண்டது. கார் கம்பனிகள் தங்கள் கார் இமேஜை கூட்டி, விற்பனையை அதிகப்படுத்தும் எண்ணத்தோடு 'ஒரு லட்சம் கார்கள் விற்பனையானது', 'நாங்கள் இலங்கைக்கு வந்து ஓராண்டு பூர்த்தியாகிறது' என்று ஏதோ ஒரு காரணம் கூறி தங்கள் புது மொடலில் சில மாற்றங்கள் செய்து அந்த விசேட கார்களை குறைந்த எண்ணிக்கையில் தயாரித்து 'லிமிடெட் எடிஷன்' என்று விற்பதைப் பார்த்திருப்பீர்கள். இவ்வகை கார்கள் சந்தையில் அதிகம் கிடைக்காது. அதனாலேயே அறிவித்த சில நாட்களிலேயே பதிவு செய்யப்பட்டு அனைத்தும் விற்பனையாகிவிடும்.

விலை குறைந்த கார்களா இவை? இல்லை, இன்னும் சொல்லப் போனால் அதே பிராண்ட் கார்களை விட விலை கூட இருக்கும். இக்கார்களில் புதுமை அதிகம் இருக்குமோ? அப்படியொன்றும் பெரிய புண்ணாக்கு புதுமை பீரிட்டு அடிக்காது. அதே நான்கு டயர், ஸ்டியரிங் வீல், ப்ரேக், க்ளச் தான். பின் என்னதான் ஸ்பெஷல் இந்த கார்களில்?

இந்த ஸ்பெஷல் குறைந்த எண்ணிக்கை லிமிடெட் எடிஷன் கார்களை விட்டால் கிடைக்காது. சென்றால் வராது. போனால் போனதுதான் என்று விளம்பரங்கள் கூறுவதால் இதையாவது விடுவதாவது என்று கார் இருப்பவர்கள் இல்லாதவர்கள், பணம் வைத்திருப்பவர்கள் இல்லாதவர்கள் என்று பலர் முண்டியடித்து இந்த கார்களை வாங்க வரிசை கட்டுவதால் விரைவிலேயே விற்றுவிடுகிறது.

குறைவாய் இருப்பது நிறைவாய் இருக்கும் என்று நினைப்பது மனித இயல்பு. அதிகம் கிடைக்காத எதுவும் சிறந்தது என்று எண்ணுவது நமது வழக்கம். கிடைக்கிற வாய்ப்பு எப்பொழுதாவதுதான் அமையும் என்ற நிலை இருந்தால் அந்த வாய்ப்பு விலை மதிப்பற்றதாக தெரியும் நமக்கு.

இந்த சைக்காலஜி டெக்னிக்கை தேர்ந்த விற்பனையாளர்கள் நேர்த்தியாக பயன்படுத்தி பயன்பெறலாம். பெறுகிறார்கள். புடவை கடையில் ஒரு குறிப்பிட்ட நகையை, புடவையை வாங்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கும் வாடிக்கையாளரிடம் 'இது தாம்மா கடைசி பீஸ்' என்று சொல்லிவிட்டால் போதும். திடீரென்று அந்த பொருளின் மதிப்பு பார்ப்பவருக்கு பல மடங்கு பெருகும். இதை விட்டால் கிடைக்காதே என்ற திடீர் பயம்தான், வேறென்ன? அந்த பயம் அவர்களை வாங்கவே வைத்து விடும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,057.22 | 6,019.95 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,204.5 | 3,180.92 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 5,975.738

**உயர்வைத் தந்த பங்குகள்(ரூ.):** சிங்கபுத்திர பினான்ஸ்(14.90), சிங்க புத்திர பினா(8.00), த பினான்ஸ் கோ(3.00), சிற்றி ஹவுஸிங்(10.00), பிம்புத் பினான்ஸ்(39.60).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** போகல காபைட்(17.40), ஈகுவிட்டி ரூ(48.00), சிலோன் பேவரேஜ்(580.60), அகலவத்தை(16.10), அக்சர்(4.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 142.87 | 146.80 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.16 | 210.39 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.76 | 165.09 |
| சுவிஸ் பிராங் | 144.16 | 150.17 |
| கனேடிய டொலர் | 106.61 | 110.94 |
| அவுஸ்திரேலிய டொலர் | 105.77 | 110.70 |
| சிங்கப்பூர் டொலர் | 103:17 | 107.12 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.14 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.30 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

122

## சிவாஜி கணேசன் நடித்த ‘திரும்பிப் பார்’

பராசக்தியில் சுவாஜிக்கு ஜோடியாக நடித்த பண்டரிபாய் அதில் அவருக்கு அக்காவாக நடித்தார். மற்றும் நரசிம்ம பாரதி, கிருஷ்ண குமாரி, கிரிஜா, தங்கவேலு ஆகியோரும் நடித்தனர். பாரதிதாசன் பாடல்கள் இடம்பெற்ற இந்தப் படத்துக்கு கண்ணதாசனும் பாடல்கள் எழுதினார். டி.ஆர்.சுந்தரம் டைரக்ட் செய்தார். இசை: ஜி.ராமநாதன்.

இந்தப் படத்தில் ஒவ்வொரு காட்சியிலும் ஒவ்வொரு விதமான உடையுடன் சிவாஜி தோன்றினார்.

10.07.1953 இல் திரும்பிப்பார் வெளியாகியது. பராசக்தி போல இது மெகா ஹிட் திரைப்படம் அல்ல என்றாலும் வெற்றிப்படமே.

திரும்பிப்பார் படத்துக்குப்பிறகு குடும்பப் பாங்கான படம் ஒன்றைத் தயாரிக்க டி.ஆர்.சுந்தரம் விரும்பினார். கவிஞர் கண்ணதாசன், திரைப்பட பாடலாசிரியர் ஆவதற்கு முன் இல்லற ஜோதி என்ற கதையை எழுதி வைத்திருந்தார். அந்தக் கதையைப் படமாக்க டி.ஆர்.சுந்தரம் முடிவு செய்தார்.

இப் படத்தின் கதை, வசனம், பாடல்களை கண்ணதாசன் எழுதினார். சிவாஜி கணேசன், பத்மினி, ஸ்ரீரஞ்சனி, தங்கவேலு ஆகியோர் நடித்தனர். பராசக்தியில் சிவாஜியின் தங்கையாக நடித்த ஸ்ரீரஞ்சனி இதில் மனைவியாக நடித்தார்.



### அனார்கலி

படம் முடிவடைந்ததும் ஸ்டுடியோ தியேட்டரில் சுந்தரம் போட்டுப் பார்த்தார். படம் மெதுவாக நகர்வது போல அவருக்கு தோன்றியது.

கருணாநிதியை அழைத்து படத்தைப் போட்டுக் காட்டினார். படத்தைப் பார்த்த அவர் சில யோசனைகளைச் சொன்னார். அதன்படி மாற்றங்கள் செய்யப்பட்டன.

அத்துடன் அனார்கலி என்ற ஓரங்க நாடகத்தை எழுதித் தந்தார். அதில் சிவாஜிகணேசன் சலீமாகவும், பத்மினி அனார்கலியாகவும் நடித்தனர்.

படத்தில் இந்த ஓரங்க நாடகம் சிறப்பு அம்சமாக விளங்கியது.

இல்லற ஜோதி பிரமாதமாக வெற்றிப் படம் அல்ல என்றாலும் தரமான படம். சிவாஜி கணேசனுக்கும் பத்மினிக்குமிடையேயான புனிதமான காதலை மென்மையாகச் சொன்ன படம்.

### சுகம் எங்கே- அம்மையப்பன்

ஆங்கிலப்படம் ஒன்றைத் தழுவி அம்மையப்பன் என்ற கதையை கருணாநிதி உருவாக்கினார். அதை ஏ.பீம்சிங் டைரக்ஷனில் நேஷனல் புரோடக்ஸன்சார் படமாகத் தயாரித்தனர்.


எஸ்.எஸ்.ராஜேந்திரன், டி.வி.நாராயணசாமி, ஜி.சகுந்தலா, எஸ்.வரலட்சுமி ஆகியோர் இதில் நடித்தனர்.


இதே கதையை, சுகம் எங்கே? என்ற பெயரில் மாடர்ன் தியேட்டர்சார் தயாரித்தனர். கதையின் கரு ஒன்றாக இருந்த போதிலும் அம்மையப்பன் ராஜா-ராணி படமாகவும் சுகம் எங்கே சமூகப் படமாகவும் வளர்ந்து கொண்டிருந்தன.

ஜெமினியில் பணியாற்றி விட்டு வெளியே வந்த கேமரா மேதை கே.ராம்நாத் சுகம் எங்கே? படத்தை டைரக்ட் செய்தார். கே.ஆர். ராமசாமியும், சாவித்திரியும் ஜோடியாக நடிதத்தனர். இப் படத்துக்கு ஏ.கே.வேலனும், கண்ணதாசனும் இணைந்து வசனம் எழுதினர்.

# மகிந்தவின் அரசியலில்...







(18 ஆம் பக்கக் கட்டுரையின் தொடர்ச்சி)

மகிந்தவும் ஜனாதிபதித் தேர்தலைக் காலத்திற்கு முன்னர் நடத்தாது விட்டிருந்தால், இவா தற்போதும் ஜனாதிபதியாக இருந்திருப்பார். சோதிடம் மற்றும் கறுப்பு மந்திரக் கோல் போன்றவற்றில் மகிந்த அதிக நம்பிக்கை கொண்டிருந்ததால், தனது கட்சியின் பொதுச் செயலர் தனக்கெதிராக தேர்தலில் போட்டியிடுவார் என்பதை இவர் கவனத்தில் எடுக்கவில்லை.

மகிந்த, கறுப்பு மந்திரவாதிகள் மற்றும் சோதிடர்களாலேயே அழிவைச் சந்தித்தார். ஆனால் இதே நம்பிக்கைகளை இவர் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காகப் பயன்படுத்துகிறார் என்பது ஆச்சரியமளிக்கும் விடயமாகும். சோபித தேரரின் இழப்பு என்பது மகிந்த்விற்கு தீமை அளித்துள்ளது.

தேரர் உயிருடன் இருந்திருந்தால், நல்லாட்சிக்கு எதிராக மக்களை ஒன்றிணைத்திருப்பார். தேரர் இறக்கும் வரை தற்போதைய ஆட்சியை எதிர்த்துச் செயற்பட்டிருந்தார். தேரர் தற்போதைய ஆட்சியில் நிலவும் பல்வேறு பின்னடைவுகள் தொடர்பாகக் குற்றம் சுமத்தியிருந்தார். இவர் தனக்கென ஆதரவாக எவ்வித அரசியல் கட்சியையும் கொண்டிருக்கவில்லை.

1977 இல் அப்போதைய ஐ.தே.க அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான பரப்புரையில் சோபித தேரர் ஈடுபட்டிருந்தார். 1994 இல் சந்திரிகா பிரதமராகப் பதவியேற்ற போது, சோபித தேரரின் விகாரைக்குச் சென்றிருந்தார். சந்திரிகா பிழையான அரசியல் பாதையில் பயணிக்க ஆரம்பித்த போது, ஐ.தே.க ஆட்சியிலிருந்து தூக்கி வீசப்பட்டு 17 ஆண்டுகள் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாமைக்குக் காரணமான சோபித தேரரால் மீண்டும் ஐ.தே.க ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டது. தேரர் உயிருடன் இருந்திருந்தால் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ந்தெழும் முதலாவது நபராக இருந்திருப்பார். இந்த உண்மையை மகிந்தவும் அவரது விசுவாசிகளும் உணரத் தவறிவிட்டனர்.

இதற்குப் பதிலாக இவர்கள் சோபித தேரரின் இறுதிச்சடங்கின் போது மதுபானம் அருந்தி மகிழ்ந்தனர். ‘பாவிகள் ஒருபோதும் ஞானிகளாக மாறமுடியாது’ இந்த உண்மை மகிந்த விசுவாசிகளுக்குப் பொருத்தமானதாகும். ஏனெனில் இவர்கள் மக்கள் மீது நம்பிக்கை கொள்ளத் தவறியுள்ளனர். ஆனால் இவர்கள் மந்திரவாதிகள் மற்றும் சோதிடர்களுக்குப் பின்னால் ஓடுகின்றனர்.

‘சேர், அன்ரன் ஜோன்ஸ் மற்றும் அஜந்த ரணசிங்க ஆகியோர் மகிந்த விசுவாசிகளின் தேங்காய் உடைப்பு வழிபாட்டாலேயா இறந்தனர்?’ என ஆட்டோ சாரதி ஒருவர் என்னிடம் வினவினார். ஆம்.. நிச்சயமாக இந்த வினாவில் அர்த்தம் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டி நடத்துவதற்கான அறிவிப்பை மகிந்த விடுத்த போது, சோபித தேரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். மகிந்த மற்றும் கோத்தபாய ஆகியோர் தேரரை அமைதியாக இருக்குமாறு அச்சுறுத்தல்களை மேற்கொண்டனர். இவர்களது அச்சுறுத்தல்கள் மற்றும் தலையீடுகளின் விளைவாகவே தேரர் நோய்வாய்ப்பட்டார்.

சோபித தேரர் இறப்பதற்கு முன்னர் அஸ்கீரிய பீடத்தின் மகாநாயக்கர் வணக்கத்திற்குரிய உடுகம சிறி புத்தரகித்த தேரர் காலமாகினார். புத்தரகித்த தேரர் இறந்த வேளையில் மைத்திரி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். மகாநாயக்க தேரர் ஒருபோதும் அரசியலில் பிரவேசிக்கவில்லை. இவர் தனது முதுமையின் காரணமாக நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

கறுப்பு மந்திர சூனியங்கள் மற்றும் தேங்காய் உடைப்பு வழிபாடு போன்றன இலங்கை ஜனாதிபதிகளை வீட்டிற்கு அனுப்புவதுடன், அரசாங்கங்களையும் கவிழ்க்குமாயின், 2009 இல் மகிந்த வீட்டிற்கு அனுப்பப்பட்டிருப்பார். ஏனெனில் 2009 இல் வடக்கில் காணாமற்போனவர்களின் பெற்றோர்கள் மற்றும் கணவனை இழந்த பெண்கள் போன்றோர் ஒவ்வொரு கோயில்களிலும் தேங்காய்களை உடைத்து வழிபாட்டில் ஈடுபட்ட போது மகிந்த வீட்டிற்கு அனுப்பப்பட்டிருப்பார்.

அவன் போறான் குடிகாரன்
எனக்கு ஊத்தடி கள்ளை
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ் குடாநாடு போதைவஸ்தின் கேந்திர நிலையமா?

12 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் வடமராட்சிப் பகுதியில் மீட்கப்பட்ட சம்பவம் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ் குடாநாடு போதைப்பொருள் வியாபாரத்தின் கேந்திர நிலையமாக மாற்றமடைகிறதா? என்ற கேள்வி இப்போது எழுகிறது.

பொதுவில் யாழ்.குடாநாடு ஆட்களை இனங்காண்பதில் சிரமம் கொள்ளாத ஓரிடம். ஊர்களுக்குள் புதியவர்கள் வந்தால் எந்த ஊர் என்று கேட்பது; அவர் தனது ஊரை சொல்ல, அந்த ஊரில் இவருக்குத் தெரிந்தவர்கள் பற்றி விசாரிப்பது, அதிலிருந்து வந்த புதியவர் யார்? என்று உறுதி செய்வது என்பனதான் எங்கள் வடபுலத்தின் சிறப்பு.

சில வேளைகளில் யாருடைய மகன் என்று கேட்பது கூட எங்கள் வாழ்வியலின் நெருக்கத்தை காட்டும் குறியீடாக இருந்தது.

ஆனால் போருக்கு பின்பு புதிய முகம்களின் வருகை அதிகரித்துவிட்டது. தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள், வெளிநாட்டவர்கள் என வடபுலத்திற்கான புதியவர்களின் நுழைவு அதிகரித்ததன் காரணமாக எவரையும் எவரும் விசாரிக்க நினைக்காமல் தாமும் தம்பாடு என்பதாக வடபுலத்து வாழ்வு மாறிவருகிறது.

முன்பெல்லாம் ஒரு விபத்தில் ஒருவர் சிறு காயத்துக்கு ஆளானாலும் வீதியால் செல்வோர் உடன் தங்கள் வாகனத்தை நிறுத்தி என்ன? எது? என்று விசாரித்து, உரிய முதலுதவி செய்து, வைத்தியசாலையில் சேர்ப்பித்து செய்யவேண்டிய அத்தனை உதவிகளையும் புரிந்த ஒரு மக்கள் சமூகம், இன்று விபத்தை வேடிக்கை பார்க்கின்ற அளவிற்கு மாறிவிட்டது.

காயமடைந்தவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றிருந்தால் அவரின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று மருத்துவர் கூறும் அளவில், விபத்தில் சிக்கியவரை காப்பாற்ற யாரும் இல்லாத நிலைமை.

இந்த நிலைமைதான் வடபுலம் தனது சமூக உறவு என்ற அடையாளத்தை இழந்து வருகிறது என்பதற்கான சான்று.

இத்தகையதொரு சூழ்நிலையில்தான் போதைவஸ்து கடத்தல்களும் துஷ்பிரயோக நடவடிக்கைகளும் கருக்கட்ட ஆரம்பிக்கின்றன.

இந்த அறிகுறிகள் தென்பட்டு கருக்கட்டல் முதிர்ச்சி அடைந்துவருகிறது என்பதாக நிலைமை மாறியுள்ளது.

இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது. இப்போது போதைவஸ்து வியாபார நிலையமாக்கப்படும் எங்கள் யாழ் குடாநாட்டை உரிய முறையில் நாம் பாதுகாக்கத்தவறினால் போதைவஸ்து காரணமாக துப்பாக்கிப்பிரயோகங்களும் கொலைகளும் நடப்பதற்கான வாய்ப்புகள் ஏராளம் உண்டு என்பதால் இது தொடர்பில் நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இந்த விழிப்பு என்பது மீளவும் எங்கள் சமூக உறவைப் பலப்படுத்துவதாக அமையும். எங்கள் ஊர்; எங்கள் கிராமம்; எங்கள் கடல்வெளி; எங்கள் நகரம் என்ற உணர்வும் உறவும் இருந்தால் நிச்சயமாக போதைப்பொருள் கடத்தல்களும் துஷ்பிரயோகங்களும் அடியோடு வேரறுக்கப்படும்.

யுத்தத்திற்குப் பின்பான ஏ9 பாதை, புகையிரதப் பயணம் என்பன யாழ்ப்பாணத்தை நகரமயமாக்கலின் உச்ச நிலைக்கு கொண்டு சென்றிருந்தாலும் எங்களின் வாழ்வியல் முறைமைகளை, சமூக உறவுகளை மீளவும் கட்டிக்காப்போமாயின் எங்கள் வடபுலத்தில் எந்த அநீதியும் இடம்பெறாமல் தடுக்க முடியும் என்பது நிச்சயமான உண்மை.

# யாழில் கூட்டுப் பொறுப்புள்ள நிறுவனங்களை விரைவில் உருவாக்க முன்வர வேண்டும்

## ஆளுநரின் செயலாளர் வேண்டுகோள்

யாழ்.மாவட்டத்தில் உள்ள முதலீட்டாளர்கள் ஒன்றிணைந்து கூட்டுப் பொறுப்புள்ள நிறுவனங்களை விரைவில் உருவாக்க முன்வர வேண்டும் என வடமாகாண ஆளுநரின் செயலாளா இ.இளங்கோவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினத்தின் மணிவிழா நிகழ்வும் "நாகரத்தினமாலை" மலர் வெளியீடும் நேற்றையதினம் யாழ் சேர் பொன் இராமநாதன் வீதியல் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

சமாதானமானதும் நம்பிக்கைக்குரியதுமான கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும் பல வேறு இன்னல்களின் மத்தியில் தான் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். இன்னல்களை கண்டு உதவும் பண்பாளர்களால்தான் எமது சமூகம் காப்பாற்றப்பட வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் சமய கலாசாரப் பண்புகள் குறைந்து வருகிறது எனவும் நன்றி இல்லாத சமூகமாக மாறி வருகிறது எனவும் பலர் கூறுகிறார்கள். ஆனால் தற்போது நாம் மீண்டும் எழுந்துவரும் நிலையில் உள்ளோம் என அனைவருக்கும் கூறிவருகிறோம். அதை நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டுடன் உள்ளோம்.

ஒருநாட்டின், பிரதேசத்தின் வளர்ச்சி என்பது தனியாக அரசதுறையில் மட்டும் தங்கியிருப்பதில்லை முக்கியமாக தனியார் துறையின் வளர்ச்சியில் தான் சமூக வளர்ச்சி உள்ளது.

எமது சமூகத்தில் தனியார் துறையில் தனிநபர்களுடைய உழைப்பு மட்டும் தான உள்ளது. கூட்டுப் பொறுபபுள்ள தனியார் நிறுவனங்கள் இல்லை அவை உருவாக்கப்படவேண்டும்.

எதிர்காலத்தில் அந்த நிறுவனங்கள் மூலம்வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

வெளி இடங்களில் இருந்து எமது சூழலின் வளத்தினை புரிந்து கொண்டு பல முதலீட்டாளர்கள் வருகிறார்கள். எமது சூழல் தற்போது சாதகமான சூழலாக இருப்பதனால் எளிதாக எமது வளங்களை கைப்பற்றி கொள்ள முடியும் என அவர்களுக்கு தெரியும் அந்த எதிர்பார்ப்புடன் அவர்கள் வருகிறார்கள்.

அதற்கு நாம் இடம் கொடுக்காமல் எமது வளத்தை நாம் பயன்படுத்துவதற்கு எமது சந்ததியினரின் வளர்ச்சிக்கு இங்குள்ள முதலீட்டாளர்கள் ஒன்று சேர்ந்து முதலீட்டை செலுத்தி சிறிய நடுத்தர முதலீட்டு திட்டங் களை உருவாக்கி கொள்ள வேண்டும். அதன் மூலம் எமது சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பங்களாதேஷ் மத்திய வங்கியிலிருந்து சீன இணைய திருடர்களால் பணம் திருட்டு

## இலங்கைக்கு அனுப்பி வைக்கவும் முயற்சி

பங்களாதேஷ் மத்திய வங்கியிலிருந்து சீனாவின் இணையத்திருடர்களால் திருடப்பட்ட மில்லியன் டொலர்கள் பெறுமதியான பணத்தை இலங்கையின் போலி அரசசார்பற்ற நிறுவனமொன்றிற்கு அனுப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்குறித்து இலங்கை மத்திய வங்கி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மத்தியவங்கி அதிகாரிகள் இத்தகவலை தெரிவித்துளளதுடன் சர்வதேச அளவில் இடம்பெறும் சட்ட விரோத பணப்பரிமாற்றத்தின் ஒரு பகுதியாகவே இது இடம்பெறுவதாக தெரிவித்துளளனர்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு வங்கியொன்றிற்கு அனுப்பபபட்ட 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் குறித்து சந்தேகம் எழுந்ததை தொடர்ந்தே இந்த மோசடி முறியடிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட பணத்தை இலங்கையில் பெற்றுக் கொள்ளவிருந்தவர்கள் குறித்த தீவிர விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

அரசசார்பற்ற தனியார் அமைபபு ஒன்றிற்கே இந்த பணம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த வங்கி கணக்கின் பெயரில்அரசசார்பற்ற அமைப்பின் பதிவை கொண்டிருப்பவர்கள் தற்போது நாட்டிலிருந்து வெளியேறிவிட்டதும் தெரியவந்துள்ளது.

மேலும் கடந்த காலங்களிலும் இவ்வாறு பாரிய நிதி இலங்கைக்குள் வந்துள்ளதா என விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனவும் விசாரணை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை இலங்கையை சேர்ந்த பல அரச சார்பற்ற அமைப்புகள் அவ்வாறான அமைப்பொன்று குறித்து தாங்கள் அறிந்திருக்கவில்லை என தெரிவித்துள்ளன. (செ-12)

# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின்விநியோக மார்ககங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை யாழ். பிரதேசத்தில அம்பலவாணர் வீதி, உடுவில் பிரதேச செயலக வீதி, சபாபதிப்பிள்ளை வீதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில ஓவசியர் கடைசந்தி, தரணிகுடியிருப்பு, நீவில், முக்கொம்பன், நல்லூர், தம்பிராய், பூநகரி, 4-ம் கட்டை, பாரதிபுரம், மலையாளபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மன்னார் பிரதேசத்தில பறயனாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத்திணைக்களம், மன்னரார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம, வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம்கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலை மன்னாா கடற்படைமுகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உலக அமைதி
## (World Peace)



1. ஒரு நாட்டுக்கு நாடு அரசியல் முறை வேறுபட்டிருக்கும் வரைக்கும்

2. இயற்கையின் மூலதனமான பூமியைத் தனி மனிதனோ அல்லது குழுவினரோ தங்களுக்குச் சொந்தம் என்று எல்லைக் கட்டி கொண்டிருக்கும் வரைக்கும்

3. ஒரு மனிதன் முயற்சியினால் விளைவிக்கும் எந்தப் பொருள எனினும் அது அவனுக்கோ, அவனுடைய வாரிசுகள் எனப்பட்ட குறிப்பிட்ட நபர்களுக்கோ தான் உரிமையானது என்ற கற்பனை முறை நீடித்திருக்கும் வரைக்கும்

4. குழந்தை வளர்ப்பு, முதியோர் பராமரிப்பு என்ற இருவகையும் பெற்றோர்கள், மக்கள் இவர்கள் பொறுப்பிலிருந்து விடுபட்டுச் சமுதாயப் பொதுவாக நடைபெறும் காலம் வரைக்கும்

5. வாலிபப் பருவமும், உடல் வலிவும் உடைய அனைவருக்கும் அறிவிற்கும், உடலுக்கும் தகுந்தபடி ஆக்கத் தொழில் புரியும் வாய்ப்பு சமுதாயத்தில் கிடைக்கும் ஒரு அமைப்பு ஏற்படும் வரைக்கும்

6. உலகில் ஒரு மனிதனேனும் உணவு கிடைக்கவில்லை என்ற காரணத்தால் பட்டினி கிடக்க நேரிடும் முறையில் நிர்வாகம் நடைபெறும் வரைக்கும்

7. உணவிற்காக வேறு ஒரு ஜீவனைக் கொல்லும் பழக்கமும், அவசியமும் மனிதனுக்கு இருக்கும் வரைக்கும்.

உலக மக்கள் வாழ்வில் நிரந்தரமாக அமைதி என்பது ஏற்பட முடியுமா?

# துணுக்காய் பிரதேச செயலக கபடி, உதைபந்து தொடர்

## தோழர்கள் இளைஞர் சம்பியன்

துணுக்காய் பிரதேச செயலக உதைபந்து கபடி போட்டிகளில் தோழர்கள் இளைஞர் கழகம் சம்பியனானது.

துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கான உதைபந்தாட்ட போட்டிகள் அண்மையில் கோட்டை கட்டியகுளம் மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப்போட்டியில் தோழர்கள் இளைஞர் கழகம் முதலாமிடத்தையும் தமிழ்தென்றல் இளைஞர் கழகம் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

இதேவேளை அன்றைய தினமே இடம்பெற்ற கபடிப் போட்டியிலே தோழர்கள் இளைஞர் கழகம் முதலாமிடத்தையும் தமிழ் தென்றல் இளைஞர் கழகம் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (க-281)





# வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம்



வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் நடுவர் சங்கத்தின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை அல்வாய் தெற்கு கிராம அலுவலர் பணிமனையில் இடம் பெற்றது.

நடுவர் சங்கத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை தலைவராக இ.அனுராகாந்தனும் செயலாளராக தெ.இந்துகானும் பொருளாளராக இ.விஜிதரனும் உப தலைவராக செ.சண்சஜனும், உப செயலாளராக சா.பிரியாங்கனும் நிர்வாகசபை உறுப்பினர்க ளாக பே. யோகாநந் சி.கௌசிகன், வி.றொபின்சன், வி.சாரங்கன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





நல்லூர் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான எல்லே போட்டியில் சம்பியனாகிய அரியாலை ஐக்கிய விளையாட்டு கழக அணியினரை படத்தில் காணலாம்.

# கரவெட்டி பிரதேச செயலக பெண்களுக்கான கபடி தொடர்

## மாலுசந்தி மைக்கல் சம்பியன்



கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான பெண்களுக்கான கபடி சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து மோதிய மைக்கல் அணி 23-36 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. நேரடியாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது வதிரி டயமன்ஸ் அணி.

இறுதிப்போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை 7-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மாலுசந்தி மைக்கல் அணி கரவெட்டி பிரதேச செயலகம் சம்பியனாகியது. (க)

# யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டச் சுற்றுத்தொடர்

## வாதரவத்தை விக்னேஸ்வரா சம்பியன்



யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த புதன்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தை எதிர்த்து உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

அதிக பட்சமாக கஜனி ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும். ஜெனித்தா 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியால அணியின் சார்பாக டர்சி இரு இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை இழந்து 47 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக நிரோஜினி ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் கஸ்மினா 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணியின் சார்பில் கஜனி, ஜெசிந்தா இரு வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். 3ஆம்இடத்தைகொழும்புத்துறைஇந்து மகா வித்தியாலயம் பெற்றது. (க)

# நெதர்லாந்து ஆறுதல் வெற்றி



இந்தியாவில் நடைபெற்று வரும் இருபது-20 உலக கிண்ணத் தொடரின் தகுதிச் சுற்று போட்டிகளின் கடைசி லீக் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

இதன் முதல் போட்டியில் ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள அயர்லாந்து - நெதர்லாந்து அணிகள் மோதின.

அயர்லாந்து, நெதர்லாந்து அணிகள் ஏற்கெனவே சுப்பர் 10 நுழைவதற்கான வாய்ப்பை இழந்து விட்டன.

இதனால் அந்த அணிகள் மோதும் ஆட்டத்தில் எந்த பலனும் இல்லை. ஆனால் இரண்டு அணிகளும் ஆறுதல் வெற்றி பெறும் முயற்சியுடன் களமிறங்கின.

நாணயச்சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

எனினும் மழை காரணமாக போட்டி 6 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து 6 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக ஸ்ரீபன் மைபேர்க் 27 ஓட்டங்கள் எடுத்தார்.

60 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 6 ஓவர்கள் நிறைவில் 47 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஆரம்ப அதிரடி வீரர் ஸ்ரேர்லிங் 15 ஓட்டங்களை எடுத்தார்.

போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் அசத்திய நெதர்லாந்தின் போல் வான் (2 ஓவர்கள் 11 ஓட்டங்கள் 4 விக்கெட்டுக்கள்) தெரிவானார்.

# பாகிஸ்தானில் கூட இவ்வளவு அன்பை நான் அனுபவித்தது இல்லை - அப்ரிடி



ஆறாவது 20 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் பிரதான சுற்று ஆட்டங்கள் இன்று முதல் (மார்ச் 15ஆம் திகதி) இந்தியாவின் பல்வேறு நகரங்களில் ஆரம்பமாகின்றன.

பாதுகாப்பு காரணங்களைக் காட்டி பாகிஸ்தான் அணி, இந்தியா வருவதை தாமதித்து வந்தது. இந்திய உள்துறை அமைச்சகம் பாகிஸ்தான் அணிக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று உறுதியளித்ததை அடுத்து நேற்று முன்தினம் மாலை கொல்கத்தா வந்தடைந்தது பாகிஸ்தான்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் அணித் தலைவர் சஹிட் அப்ரிடி, இந்தியாவில் விளையாடும் போது எனக்கு ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. என் கிரிக்கெட் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் இருக்கிறேன்.

இந்தியாவில் எனக்கு கிடைக்கும் அன்பை வாழ்நாள் முழுவதும் நினைவு கூர்வேன். இந்தியாவில் எங்கள் மீது காட்டப்படும் அன்பானது, பாகிஸ்தானில் கிடைப்பதை விட அதிகம்.

சர்வதேச கிரிக்கெட் போட்டி களில் யார் அழுத்தத்தை சமாளித்து ஆடுகிறார்களோ அவர்களே வெற்றி பெற முடியும் என்று அப்ரிடி மேலும் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகள் இடையிலான லீக் ஆட்டம் கொல்கத்தாவில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# ஐ.பி.எல். அனுபவம் உதவும் - ஸ்மித்

இருபது - 20 உலக கிண்ணத் தொடரில் சவாலை எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும் இதற்கு ஐ.பி.எல். அனுபவம் உதவும் எனவும் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

உலக கிண்ணத் தொடர்களில் இருபது- 20 சம்பியன் கிண்ணம் மட்டும்தான் எங்களிடம் இருந்து தப்பித்துள்ளது. நாங்கள் எல்லா ஆட்டத்திலும், தொடரிலும் வெற்றி பெற விரும்புகிறோம். எங்கள் அணி சிறப்பாக உள்ளது. இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய 15 வீரர்கள் அணியில் உள்ளனர்.

தென்னாபிரிக்காவில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரை வென்றுள்ளோம். வீரர்களின் ஆட்டத்திறனில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் நல்ல போர்மில் இருக்கிறோம்.

எங்களது திறனை நாங்கள் நிச்சயமாக வெளிப்படுத்துவோம். நாங்கள் சிறப்பாக செயல்படும் பட்சத்தில் எங்களை வீழ்த்துவது கடினமாக இருக்கும். அணியில் அதிக அளவிலான சகலதுறை வீரர்கள் உள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் அவர்கள் சிறப்பாக பந்து வீசி வருவதுடன் வலுவான துடுப்பாட்டத்தையும் கொண்டுள்ளனர்.


இந்தியாவில் அதிக அளவிலான ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்றுள்ளோம். அதனால் இங்குள்ள சூழ்நிலைகள் பற்றி தெரியும். நாங்கள் சவாலை எதிர்கொள்ள தயாராக உள்ளோம்.

தொடரை வெற்றிகரமாக தொடங்குவது மிகவும் முக்கியமானது. கடந்த காலங்களில் இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக விளையாடி வந்துள்ளேன்.

மீண்டும் அதே போன்று ஆட்டம் அமைந்தால் சிறப்பானதாக இருக்கும். சமீபத்தில் ஆடிய சில ஆட்டங்களில் நல்ல முறையில் ஓட்டங்கள் சேர்த்தேன். அதனை இந்த தொடரிலும் எடுத்து செல்வேன் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு ஸ்ரீபன் ஸ்மித் கூறினார்.



# இருபது-20 பயிற்சிப் போட்டி போராடி வீழ்ந்தது இந்தியா



தென்னாபிரிக்க அணிக்கு எதிரான உலக கிண்ண பயிற்சிப் போட்டியில் இந்திய அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் போராடி வீழ்ந்தது.

இந்தியாவில் உலக கிண்ண இருபது-20 தொடர் நடக்கிறது. இதற்குத் தயாராகும் வகையில் இந்தியா, தென்னாபிரிக்க அணிகள் நேற்று முன்தினம் பயிற்சி போட்டியில் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு அம்லா (5), அணித் தலைவர் டுபிளசிஸ் (12) ஏமாற்ற, குயின்டன் டி ஹொக் (56), டுமினி (67) அரைசதம் கடந்தனர். பின் வந்த மில்லர் (18), ரூசோவ் (11) மோரிஸ் (14) சற்று கைகொடுக்க தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 196 ஓட்டங்கள் குவித்தது.

கடின இலக்கைத் விரட்டிய இந்திய அணிக்கு ரோகித் சர்மா (10), ஹோலி (01) விரைவில் அரங்கு திரும்பினர்.

ரஹானே (11) மறுபடியும் அணியை கைவிட்டார். பின் தவான், ரெய்னா இணைந்து சற்று வேகமாக ஓட்டங்கள் சேர்த்தனர்.

தவான் அரைசதம் எட்டினார். இதனிடையே ரெய்னா (41), தவான் (73 ஓட்டங்கள, 53 பந்து) இருவரும் 'ரிட்டயர்ட் ஹேர்ட்' முறையில் திரும்பினர்.

கடைசி ஓவரில் 14 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் 10 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டது.

இந்திய அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.

தோனி (31), யுவராஜ் (16) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



## புதிய கடன்களை...

த்தி ,செய்வதற்குமே சீனாவிடம் புதிய கடன்கள் கோரப்பட்டுள்ளன.

அண்மையில் சீனா சென்றிருந்த போது, சீனாவின் அபிவிருத்தி வங்கி, எக்சிம் வங்கிய ஆகியவற்றின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து இது தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தியிருந்தேன்.

இந்தப் பேச்சுக்கள் பயனுள்ளதாக இருந்தன. பல்வேறு திட்டங்களை நடை முறைப்படுத்துவதற்காக நிதி ஒத்துழைப்பு கோரப்பட்டது. அவர்கள் எமக்கு உதவத் தயாராக இருந்தார்கள்.

நாம் திட்டங்கள் தொடர்பான வரைபை கொண்டிருக்கிறோம். அவற்றுக்கான நிதி ஆதரவை சீனாவிடம் கேட்டிருக்கிறோம்.

ஆனால் இன்னமும் எதுவும் இறுதிப்படுத்தப்படவில்லை. இது அவர்களின் முன்னுரிமைப் பட்டியலில் இருக்கிறது.

அம்பாந்தோட்டை பொருளாதார வலயத்தில் சைனா மேர்ச்சன்ட்ஸ் நிறுவனம் முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாந்தோட்டை விமான துறைமுகம் மற்றும் மத்தல விமான நிலையம் ஆகியவற்றை கூட்டுமுயற்சியாக அபிவிருத்தி செய்யும் திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மத்தல விமான நிலையத்தை இயக்குவதற்கு, அதனை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவை சீனத் தரப்பு முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## கப்பம் கோரியே...

நிலையில் இருந்த வான் தொடர்பாக 119 இலக்கத்தின் ஊடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அந்த வானிற்குள் இருந்து 5 சடலங்களையும் மீட்டிருந்தனர்.

குறித்த சம்பவத்திற்கு பணம் கப்பம் பெறுதலும் ஒரு காரணமென பொலிஸார் நம்புவதாகவும், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதாகவும் குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-12)

## இலங்கை-இந்திய...

தின் போது, மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சு நடத்த, புதுடில்லி வருமாறு அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்தமாதம், அமைச்சர் மகிந்த அமரவீர புதுடில்லி சென்று பேச்சு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இந்திய அரசாங்கம் இந்தப் பேச்சுக்களை வரும் மே மாதம் வரை பிற்போட்டிருக்கிறது.

இந்திய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான உயர்மட்டப் பேச்சுக்கள் வரும் மே மாதம் புதுடில்லியில் நடக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆனாலும், இந்தப் பேச்சுக்கள் பிற்போடப்பட்டது குறித்து, இலங்கை அரசாங்கத்துக்கு அதிகாரபூர்வமாக எந்த தகவலும் தெரியப்படுத்தப்படவில்லை.(செ-12)

## ஆட்டம்...

அதன் பின்னர் ராஜபக்ஷர்களினால் இந்த நாட்டில் வாழ முடியாது.

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறும் பொது எதிரணியினரின் எதிர்ப்பு பேரணியையும் தான் கண்டிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (செ-12)

(விரிவான செய்தி 11ஆம் பக்கத்தில்)

## மோட்டார்...

றுள்ளனர். எனினும் மோட்டார் சைக்கிளில் கலைத்து கலைத்து நடு வீதியில் வெட்டியுள்ளனர். இச்சம்பவம் நடைபெற்றது கே.கே.எஸ். வீதி என்பதனால் குறித்த இடத்தில் அதிக சன நாட்டமும் காணப்பட்டுள்ளது.

எனினும் பலர் பார்த்திருக்க நடந்த இந்த துணிகர சம்பவம் அனைவரையும் பயத்தில் ஆழ்த்தியுள்ளது. குறித்த வாள்வெட்டில் காயமடைந்த இளைஞர்கள் அனைவரும் தட்டா தெரு மற்றும் கலட்டியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவத்தில் கே.கேமராஜன் (வயது 17) என்ற மாணவர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் சினிமா பாணியில் நடைபெற்றதாகவும், சுமார் நூற்றுக்கணக்கானோர் சம்பவ இடத்தில் நின்றபோதும் எவ்வித அச்சமும் இன்றி வாள்களுடன் வந்திறங்கிய கும்பல் சரமாரியாக வாள் வீச்சினை மேற்கொண்டதாகவும், அங்கு நின்ற இளைஞர்கள் தப்பி செல்லாவிட்டால் நிச்சயம் ஒரு கொலை சம்பவித்திருக்கும் என குறித்த வாள்வெட்டு சம்பவத்தை நேரில் கண்டவர்கள் விபரிக்கின்றனர்.

கொடூரமான முறையில் நடைபெற்ற இவ் வாள்வெட்டு சம்பவத்தினால் அங்கு நேற்று இரவு முழுவதும் பெரும் பதற்றம் நிலவியது. எனினும் இவ்வாள்வெட்டு சம்பவத்திற்கு காரணம் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தகராறே காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வாள்வெட்டு கும்பல் தொடர்பில் வெட்டு வாங்கிய இளைஞர்களிடம் விசாரணை மேற்கொண்டால் தகவல் தெரியவரும் என ஒருசிலர் தெரிவிக்கின்றனர். இவ்வாறான சமூக விரோத கும்பல்களை இவ்வாறு வெளியே நடமாட விட்டால் ஆபத்து எனவும், இவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, வெட்டுக்கு இலக்கான நபரிடமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அண்மைக்காலமாக கஞ்சா கடத்தல், வாள் வெட்டு சம்பவங்கள், திருட்டு மற்றும் கொள்ளை என்பன யாழ்ப்பாணத்தில் அதிகரித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## சில்லறை...

அபேகோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான காரணிகளை தற்போது ஆராய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சிகரட் பெட்டிகளில் 80 சதவீதமான பகுதியில் நோய் பாதிப்பு குறித்து விளம்பரப்படுத்தும் நடவடிக்கைகள் கடந்த வருடம் டிசம்பர் மாதம் முதல் அமுலாக்கப்பட்டது.

எனினும், சிகரட் உள்ளிட்டவற்றை, சில்லறைக்கு விற்பனை செய்வதை தடுப்பதன் ஊடாக, மேலும் சிகரட் உள்ளிட்ட புகையிலைப் பொருட்களின் பாவனையை குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறியுள்ளார். (செ-12)

## நாசவேலை...

படையில் மின்சாரம் தடைப்பட்டதா என்பதனை தெரிந்து கொள்ள வேண்டும்.

எவ்வாறெனினும் விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளின் அடிப்படையிலன்றி மின்சாரத் தடைக்கான காரணங்களை கண்டறிய முடியாது. அதன் பின்னரே மின்சாரத் தடை ஏற்பட்டமைக்கான காரணத்தை கண்டறிந்து கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

WEGS PLUS
Success

பணியாளர்கள் தேவை

(WEGS PLUS சந்தைப்படுத்தல் நிறுவனத்திற்கு)

பதவி நிலைகள்

01) மாவட்ட விற்பனை முகாமையாளர் (இரு பாலாரும்)
02) விற்பனை பிரதிநிதி (இரு பாலாரும்)
03) கணினி பகுதிக்கு பணியாளர் தேவை (மிருசுவில் பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. பெண்கள் மட்டும்

மாவட்ட விற்பனை முகாமையாளர் எனின்,

01) O/L பரீட்சைக்குத் தோற்றியிருக்க வேண்டும்.
02) சந்தைப்படுத்தல் அனுபவம் விரும்பத்தக்கது.
03) மோட்டார் சைக்கிள் உடன் சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்

விற்பனை பிரதிநிதி எனின்,

01) O/L பரீட்சைக்குத் தோற்றியிருக்க வேண்டும்.
02) சந்தைப்படுத்தல் அனுபவம் விரும்பத்தக்கது.

கீழ்வரும் மாவட்டங்களுக்கு வெற்றிடங்களுக்கு கோரப்படுகின்றன. யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை ஆகும். எனவே இந் நிறுவனத்தில் தொழில்புரிய விரும்புவோர் கீழ் காணும் முகவரிக்கு தங்கள் சுய விபரக் கோவைகளை அனுப்பி வையுங்கள்.

விண்ணப்ப முடிவுத்திகதி - 02/04/2016

01. அனுப்ப வேண்டிய முகவரி :-
தன்னிறைவு பொருளாதார வழிகாட்டல் உலகம்
A9 வீதி, மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

வாகனம் வாடகைக்குத் தேவை

01) பட்டா or சுப்பர் Ace
02) மக்சிமோ or வொளிறோ

தொடர்புகளுக்கு :- 0774580447
0767266043

(3889)



(சி-4003)

வேலை வாய்ப்பு

யாழ், கிளிநொச்சி, சாவகச்சேரி நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office தெரிந்த இருபாலாரிடமிருந்தும் கணினிப்போதனாசிரியர் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தொடர்புகளுக்கு - 0773614572

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
- காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
021 222 3536

10, கஸ்தூரியார், வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.

(சி-4005)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.